785

5

யாகாதிர்.

இஃது,

# பாத்திமா நாயகம்

## பிள்ளைத் தமிழ்.

திருநெல்வேலியைச் சார்ந்த மேலப்பாளையம்
புலவர் நாயகஞ் செய்யிது முகியித்தீன்
கவிராஜரவர்களின் பேரர்
சங்கீத வித்வ தீப ரட்சாமிர்தக் கவிப்பிரபு
ஷாகுல் ஹமீதுப்புலவரவர்கள் குமாரர்.

**மீரான்சாகிபுப் புலவரவர்களா லியற்றி**

நாகூர் ஷாகுல் ஹமீது ஆண்டவர்கள் மகமகவாய்வந்த
மெய்ஞ்ஞான குரு ஹலறத்து மௌலானா மௌலவி
ஷாஹா சுல்தான் கலீபா சாகிபு அவர்கள் முன்பில்
அரங்கேற்றஞ் செய்வித்து

ஸ்ரீவைகுண்டத்துக்கடுத்த பேட்மா நகரத்தில் வசிக்கும்
ஹலறத்து மௌலானா மௌலவி,

**K. M. மீரான்சாகிபு ஆலிம் அவர்கள்**
பொருளுதவியால்,

மேலச்சேவல் சீறாவேண்பாபுலி பாவா முகியித்தீன் பாவலரால்
பார்வையிட்டு,

பேட்டை சே. ப. மு.
முகம்மது செகுஇபுறாகீம் இராவுத்தர் அவர்கள் முயற்சியின்பேரில்,
ஷை. மீரான்சாகிபுப் புலவரவர்களால்
திருநெல்வேலி,
...ல் இஸ்லாம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது
...பி 1000    1920.    முதற் பதிப்பு.
ஹிஜ்ரி 1338—ம் வருஷ ஜமாதிலாகர் மீ

0-15 MMS4,P
N20

இத்திருந்த மியற்றும் புலவரவர்கள் போதகாசிரியராகிய
செவ்வல் தலைமைப் புலமை சீரா வெண்பா-புலி

## பாவா முகிய்தீன் பாவலரவர்கள் இயற்றிய

அறுசீர்கழில் நெடி-விருத்தம்.

குளகம்.

கணப் பொழுதிலனந்த விதக்கவி மாரிபொழிந் தெங்கும்
கவிஞர் மேன்மை
மணப் புகழைப் பெறுஞ் செய்யிது முகியித்தீன் கவிராஜா
வண்குலத்தின்
பணப்புவியி லுற்பவித்துச் சங்கீத ஷாஹித்யம்
பாடும் வாய்மைக்
குணச்சாகுல் கமீதென்றபுலவ ரருந்தவத் தீன்ற
குழந்தை மன்னே
இலக்கணச்சீர் முழுதுணர்ந்த நன் மீரான் சாகிபென்ற
வெழில் சேர் வாணன்
துலக்கமுறு நபியிறசூ லின்ற திருபாத்தி மத்துத்
தோகை மீது
விலக் கொழித்து விதி பொருந்த நற்பிள்ளைத் தமிழொன்று
வியப்பாச் செய்தான்
அலக்கணறுங் கவிவாணர் கண்டு பரமா நந்த
மடையத்தானே.

கோட்டாறு மகாவித்வானும், மதுரை தமிழ்ச் சங்கத்துப்
புலவரு ளொருவருமான பகாமதி சதாவதானி
தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்

## கா. ப. செய்குதம்பி பாவலரியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடியாசிறிய விருத்தம்.

உலகமுதற் பலபொருளும் படைத்துக் காத்த
ஒருவனொளி தனிலுதித்த வுண்மை நாதர்க்
கிலகவரு மகள் பாத்திமா வாந்தாய்மே
லினிய தமிழ்ச் சுவையனைத்து மிசைந்து காண
அலகில் சீர் சேர் பிள்ளைத் தமிழொன் றீந்தான்
அருமை செறி மேலப்பாளையத்திற் கோர்
திலகமென வந்துதித்த ஷாகுல் ஹமீது
செல்வன் மீரான் சாகிப் செம்மலன்றே.

(library stamp, partly illegible)

நாகூர் தர்கா மகாவித்வான், குலாம் காதிறு நாவலரின்
மாணாக்கர், தர்கா பிரசங்கி,

## க. காதிறு முகியித்தீன் சாகிபு இயற்றிய

## சாற்றுகவி.

தானாகித் தனியாகித் தனக்கு நிகர் தானிலதாய்த் தகைமை பெற்ற
கோனான வொருபரனின் றிருத்தூதாய் வருமிறசூல் குவலயத்திற்
றேனாறு மலர்க்குழலார் தினந்துதித்து வணங்கு தற்கு திறயாயீன்ற
கானாருஞ் சொற்க நகர்க் காசி யெனும் பாத்திமத்து ஹாத்துன்மீது 1

மீனமருங் கடலுலகார் முஸ்லிங்க ளினத்தொகுதி மிகமலிந்தத்
தேனமரு மலர்ச்சோலை செறிமேலப் பாளைய மென்றிவ்யநாடன்
கானமருங் கவிபொழியுஞ் செய்யிது முகியித்தீனற்கவிஞர் வேண்டும்;
வானமருந் தவபேற்றின் றிருகுலத்தில் வையகத்தில்வந்துயர்ந்தோன். 2

பாகுசெறிந் துறுமினியச் சங்கீதப்பாவினங் கட் பாரோர் மெய்க்க
வாகுசெறிந் துறுங்கவிதை யினைமணிபொற் செய்விக்கும் வல்லபத்தின்
சேகுசெறிந் துறுநாவின் ஷாகுல் ஹமீதுப் புலவன் செய்தவத்தி
னாகுசெறிந் துறுமகவாய்வரு மீறான் சாகிபிதனை நவிற்றினானே. 3

தெள்ளுதமி ழினத்தொகுதி வழுவில தாய்க் கவியினத்தார் திவ்யமிக்கப்
பிள்ளைப் பாவிந்நூ லெடுத்துரைத்தோ னியாவனெனப்பேசக்கேண்மின்
கள்ளுகுக்கும் மலர்ச்சோலை செறி நாகையமர் பெருமான்கவின் குலத்தில்
வள்ளலெனு மபுல்ஹசன் ஹக்கானி சாகிபுவின் வழிபிடித்தே. 4

மனத்திருளை யறமாற்றும் மாமதியாய் மவுலவியாய் மாநிலத்திற்
கனத்த புகழினைப் பெறுஞ் சுல்தான் கவிபா சாகிபுவின் கதம்பிடித்து
வினைத்துமிதுவெனத்தெளிந்தோன் ஷாகுல்ஹமீதெனும் புலவரரியபாலன்
மனத்திடமா மீறான் சாகிபுபுலவனிந்நூலை வழுத்தினானே. 5

### வெண்பா.

ஹாத்திமுன் னன்னபியின் கண்மணியி னேருதித்த
பாத்திமா நாயகமேற் பாங்கோடு—நாத்திரத்தாற்
பிள்ளைத் தமிழாம் பெருநூலைச் செய்வித்தான்
றெள்ளுமிலக்கணச் சீர் தேர்ந்து.

வஹுத்தான் கிபுரியா வண்மைசேர் மார்க்க
சுஹுத்தான் கவிபாசா கிப்வின்—நலத்தாருங்
கைப்பிடித்தோ னிந்நூலைக் காணரிதாய்ச் செய்வித்தான்
மெய்ப்பிடித்த நாயகியின் மேல்

பாண்டிமண்டலம் செவ்வல்மா நகரம் வித்வான் ஸ்ரீலஸ்ரீ

**எம். எ. நெயினு முகம்மதுப்பாவலர் இயற்றிய**

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய-விருத்தம்.

காத்திமா நபிக்கடவு டிருவொளியிற் கதித்தெழுந்த
கற்பாஞ்ஜோதி
பாத்திமா நாயகி பூந்தாள் வேண்டி நாலமுரும்
பணிக்கவேம
காத்துமா மங்கையூர் ஷாகுல் ஹமீது கவி
யரசன் பெற்ற
எத்றுமா மீருன் சாகிபு பிள்ளைத் தமிழிதனை
யியம்பினனே.

நேரிசை வெண்பா

பிள்ளைத் தமிழாற் பெருமான் பெண் பிள்ளையின்மேற்
பிள்ளைத் தமிழாம் பிரபந்தம்—கள்ளவிழும்
நீரோடு கான் மங்கையூர் மீருன் சாகிபு நற்
பேரோடு சொற்றுன் பெரிது.

---

மேலப்பாளையம், புலவர் செய்சப்பாவென்ற பு. செ. மு.
முகியித்தீன் பிள்ளையவர்கள் குமாரர்,

**பு. செ. மு. முஹம்மதுஹனிபா இயற்றிய**

சாற்றுக்கவி.

வெண்பா.

கற்புவளர் பாத்திமத்தென் கண்மணியின் றாள்மீது
பொற்பணிகொள் ளாபரணம் போற்பிள்ளை—நற்கவியை
கண்டுதேன் கைப்பக் கவிவாண ரும்வியப்ப
தண்டமிழி னுலிசைத் தான்

முத்தமிழை நன்குணர்ந்த முஸ்தபா நந்நபிமேற்
பத்தமுடன் நற்பனுவற் பாடியே—சித்தந்
துறந்தசா குல்ஹமீது பாவலரின் றோன்றல்
அறந்திகழ்மீ ருன்சாஹி பாம்.

JUN 1920

எவ்வாற்றூனு மொப்பற்ற றப்பிலாலமீன் கருணை தோழ ராகிய நபிகளுயகம்செய்யிதுல் முறுசலீன் ஷபீகுல்முதுனபீன் முகம்மது முஸ்தபா அகுமது முஜ்தபா காத்திமுல்லன்பியா றசூல் ஸல்லல்லாகு அலைகிவஸல்லமவர்கட் கல்புக்குகந்த அருமையான பிராட்டியாய் வந்த கற்பு நாயகி கதீஜத்துல் குபுரு றலியல்லாஹு அன்கா யவர்கள் பெற்ற குழந்தைகளில் இரத்தினமணியைப் போலே பூமியிலுள்ள பெண்கட்கும் சுவர்க்க லோகத்திலுள்ளபெண்கட்கும்என்றென்றைக்கும்இராஜாக்கினி யாயிருக்க மயில்போலே ஏழாவது பிறந்தமாது சிரோன்மணி

# பாத்திமத்துஸ்ஸஃறு

## நாயகமவர்கள் பேரில்

# பிள்ளைத்தமிழ்.

திருநெல்வேலியைச் சார்ந்த மேலப்பாளையம் புலவர்
நாயகம் செய்யிது முகியித்தின் கவிராஜரவர்கள் குமாரர்
முகியித்தீன் பிள்ளைக் கவிராஜரவர்கள் குமாரர்,
செய்கு முகியித்தீன் புலவரவர்கள் குமாரர்
சீராவுபங்கியாசி மீறன்சாகிபு புலவரவர்கள் குமாரர்
சங்கீத வித்வ தீபரட்சாமிர்தக் கவிப்பிரபு
ஷாகுல்ஹமீதுபுலவரவர்கள் குமாரர்

## மீறன்சாகிபுப் புலவரவர்களால்

## இயற்றியது.

காப்பு.

வெண்பா.

மின்னமரு மேகம் விபப்பாய்க் கவிகையிட
மன்னரிற சூலீன்ற மாமலரின்—பொன்னரசி
பாத்திமா மீது பிள்ளைப் பாப்பாட வெவ்வுயிருங்
காத்தாளும் வல்லவனே காப்பு. (1)

யாகாதிற்.

# பாத்திமா நாயகம் பிள்ளைத் தமிழ்

## காப்புப் பருவம்.

### கடவுட்டுதி.

திருவா ருதியோடறுசோடு சிறந்த குறுசு சுவனமொடு
திகழ்வெண் கணங்கள் மதிரவியுஞ் சேர்ந்த வெற்புமெழுதோற்றங்
கருவா யிருந்துதான் சமைத்த கத்தன் றூதரா யுசித
காவுசெறிந்த மக்கநகர் கதிசேரப்துல் லா தவத்தின்
மருவாயு தித்திம் மாணிலத்தை மதிப்பாயாண்டு முதியோர்கண்
மனமீதுறைந்த வஞ்ஞான மருவாதகற்றித் தீன்வழிக்கு
குருவா யிருந்த நபியிறசூல் குவலயத்திலீன்றெடுத்த।
குணஞ் சேர் பாத்திமாதம்மைக் குறைவிற் காப்பாய் றகுமானே. (1)

### நபிகட்கிறைவர் துதி.

முன்னொளி யிறையவ னொளிவினிற் றெளிவாகி
முறையாய்த் திரண்டு முத்தாய்
மோன முறும் புள்ளிக் கலாப மயில் வடிவாகி
முதுமை சஜரெத் தெகீனி
லன்னொளி ருந்து பல தோற்ற முந்தன் னொளிவி
லாகி நல் லணியாகவே
அள்கமல ராமினு புத்ர நவரத்ன மா
மாங் காங்கு புகழுதற்கே
பின்னொளி லோங்கு மாமனுவாக வந்தவெம்
பெருமான் முகம்மதரசே
பெட்புற்ற குவை வீதுவேங் தென்ற தருவினிடை
பிரச நற் கனியாகவே
என்னரு மருவித் துலங்கு கதிஜா வென்ற
வேந்திழை தவத்திலுற்ற
இனிய மொழிமதிமுகப் பாத்திமத் தரசியை
இன்புறக்காக்க வென்றே (2)

## லட்சத்தறு நான்குசகஸ்த்திரநபிகட்டுதி.

செங்தேன் றுளிக்கு மலர்ப் பூஞ்சோலை சூழ்வாவி
சேலினம் விண்ணெழுந்து
திகழூநற் கமுகுமட லறவொடித் தாசினியின்
தீங் கனி யினுற்ற மதுவை
யந்தமுற மேதினி யிற் சிதற வைத்தணிமுகி
லகட்டைக் கிழித்து மாரி
யமுகுற்ற துளியினெடு மீண்டு வந்தம்புயத்
தாவியை யடுத் துலாவும்
சந்தமுறு மாமக்க நகரிலணி தீபமாய்த்
தானுதித் தோங்கு மகிமை
தங்கு மணிநகை பாத்திமா வரசியைக் காக்க
தருமநயகுண மேவிய
முந்த வொரு லட்சமோ டாறு நாற் சகஸ்திர
முறைமை நபிமார் கடம்மை
மோன மாயான் புகழ்ந் தனுதினமு மறவாது
முளரி நற்றாட் டுதிப்பாம் (3)

## நான்கமரர்துதி.

ஆதிசேடன் சிரஞ் சுமைகொண்ட புவிமீதி
லீனநன் மாக்களுக்கே
யஞ்ஞான நீக்கியருண் மெய்ஞ்ஞான நற்றீனை
யணிதர மொழிந்த பெருமான்
சோதியா யெவ் வுயிர்க்குயிராக நின்றங்கு
சொக்கியர சாண்ட பெருமான்
சொல் லொணுப் புகழ் பெற்ற வல்லனறு சேதிநற்
சோபனங் கொண்ட பெருமான்
போதிக்கு மாமறை மொழிந்து நன்மோட்ச வழி
புகுத வைத் தாண்ட பெருமான்
புதுமைக ளனந்தமே செய்து மாமதி யினெடு
புகன்ற வாய் கொண்ட பெருமான்

வேதிய ருறைந்தமா மக்க நம் பெருமானிம்
மேதினியி லீன்ற மகளை
மேன்மை யுடனே கரக்க ஜிபுரிலொடு மூவரை
வியப்பாய்த் துதித்துரைப்பாம் (4)

## ஹபூபக்கர் ஸித்தீகு நாயகர் துதி.

முத்து நவரத்தினத்தாற் செய்து மகிமையுறு
மேழ்ந சுவனப் பதியினில்
மூதமுறைப் பொற்றட்ட மிசைகொண்டு வந்துநன்
முறையாகவே கொடுத்த
கத்தனரு ளூற்றகருபாவென்ற மக்க நகர்
கன்னி திருவாமினாவின்
கருணையுள மகிழுநற் பேத்திபா யுலகினிற்
கனமாயுதித்த செல்வி
சித்து நிலை குடிகொண்ட பாத்திமத் தன்னையைச்
சிந்தை களிகொண்டு காக்கத்
தெண்டிரைக் கடலி லுதையஞ் செய்துவருகின்ற
தினகரன் மீது நாமம்
சுத்தமா யெழுதுமொரு வல்லோனை நித்தந்
துதித்து நற்பதும வாயிற்
சொற்கலை யடக்கு மதியபுபக்கர் ஸித்தீக்கின்
துணையடி புகழ்ந்துரைப்பாம் (5)

## உமறுகத்தாப் நாயகர் துதி.

திருவுலாவிய வாரிசூழுலக னைத்தையுஞ்
சிருட்டிக்க முன்னமாவிற்
றிகழுற்றெழுந்து பல்லண்டமுந் தானகித்
திவ்யமா மக்க நகரி
லருளுலா வியவப்துல்லா தவப்புத்ரா
யணியா யுதித்த நபினா
ரகுமது முகம்மதுற சூல் முஸ்தபாவீன்ற
யணி மாதரைக் காக்கவே

இருளுலா விய இரவை நீக்குதய ளெளிமங்க
இருவிழி சினந்து பார்த்த
எம்பிரா னடையலரை வென்று நற்றீனை
இயல்பாய் நடாத்து நயினர்
பொருளுலாவிய மறையுணர்ந்த நல்லுள்ளம்
பொருந்து மா மகிமை வள்ளல்
புங்கமுறு முமரிபுனு கத்தாபினிருதானை
பொற்புறச் சிரசிலணிவேன் (6)

உதுமானுயகர் துதி.

கந்தர நிகர்த்த குழலன்ன நடையமுத மொழி
கன்னி கதிஜாபயின்ற
கற்புநிலை குடிகொண்ட உபயவொளி யாமகிமை
கன்னியரை மணமுடித்த
சுந்தரப்பலகையாம் லவுகினைப் பார்த்துநாற்
சுருதியை வரைந்த நயினர்
சுசிகர வஜீகர திவாகர மனைகாத்
தோன்ற லுது மானிரண்டா
மந்தமுறு மம்புயத் தணையடியை யனுதின
மகத்துள் விருத்தி யணியாய்
யவனி மிசை புகழு வாமுக முடிவு வேளையினி
லணிபெற்ற நீனோர்களின்
விந்தை பெறு மாதரை யாதரித்தாளவரு
மேந்திழை பச்சை மயிலா
மின்னைப் பழித்தவிடை பாத்திமத் தாசியை
மேன்பெறக் காக்க வென்றே (7)

ஹலறது அலி நாயகர் துதி.

வட்டமதி போற் பிரபை தங்குநற் சுவனபதி
மாளிகைக் குள்ளிருக்கு
மரகதத் தமருஞ்சன் மீதுறைந்தாமாதர்
மனமகிழ்ந் தாட்டுதற்கே

இட்டமா யிங்குதய மாயப் பசுங்கிளியை
    இன்புறக் காக்க வென்றே
இப்புவியைச் சுமைகொண்ட பணிமருட னெறுநெறுன
    இறைவாரி யழருக்கவே
அட்டகிரி மலையினொடு மேருவு மசைந்து நிலை
    யமையாது தான் குலுங்க
அருணனொளி மங்கவே யடையல ரொடுங்கவே
    யணிமுகிற் சிதறியோடக்
கட்டழகு கொண்டதுல் துல்லென்ற குதிரையை
    கதியாய் நடாத்து நயினர்
கவருற்ற வாளேந்தும் நளினக் கையபலியுபய
    கமலப்பதந்து திப்பாம் (8)

## சகா பாக்கடுதி,

அரவோடுரைத்த மருமூது நபி முஸ்தபா
    யணியா யெடுத்து முத்து
மமர ருறை சுவனபதி செங்கனியை யுண்ட சீ
    ரசனுசை னிருபாதமும்
புரவலர் சுபைறு தல் காசகிது ஆமீறு
    புங்க சகுதப்து றகுமான்
புனித நாற்பத்தி ரண்டாயிர மசுகாபி
    பொற்றாமரைப் பாதமும்
வரமேவு நாலிமா முபய தாண்மலரையும்
    வையத் திறந்த மாதின்
வல்லுயிரை மீட்டி யருளுற்ற முகியித்தீனொலி
    வனசமா மலரடியையும்
பரமனின் னருள்பெற்ற மற்ற ஒலி மார்களிரு
    பதமலரையும் போற்றுவாம்
பாத்தி மத்தன்னை யின் மேலிப் ரபந்தங்கள்
    பண்புடன் பாடுதற்கே (9)

## ஞான தேசிகர் துதி.

நந்தா மணித்தீப வொளியென வளங் கெண்ட
    நன்னகை நகரில் வாழும்

நாதர் ஷாகுல் கமீதாண்டவர்களு பயபத
நளினம் புகழ்ந்து மன்னோர்
நற்பாலர் செய்யிது முகம்மது யூசுபா
நாயகரையுந் துதித்து
நானிலத் தவர் மரபி லன்பா யுதித்து சித
நான் மறை பொருளுணர்ந்துச்
சிந்தாத காமீன் ஜன் சீன் காபு னொடு
சேருஞ் சுபத் தெடுத்தே
திருவதா யெங்கு நிறைசோதி வடிவானவன்
றிதாறை யெப்பொழுதினும்
சேமமாய் கண்டு ஹக்கென்று நல்லிதயத்திற்
சிந்தித்திரைஞ்சும் வள்ளல்
செய்குனா வென்னுள மிசைந்த ஒஸ்தாதுனா
ஜெகதலம் புகழொலியுனா
சந்தேக மற்றதிரு காஜியாம் செய்கு சுல்த்
தான் கலீபா சாகிபுச்
சரணமாம் பங்கயம் போற்றியு நாற்கவிதை
தனை நொடிக்குள் ளனந்தம்
தான் பாடும் செய்யிது முகியித்தீன் கவிராஜர்
தாளைப் புகழ்ந்து மன்னோர்
தன்மரபி லுற்பவஞ் செய்து சங்கீதமொடு
சாற்று நற் பிரபந்தமும்
மந்தார மொத்தகர வள்ளலிறசூலின் மேன்
மாண் பாய்ப் புகழ்ந்து பாடும்
மதுர கவிதீபகநா குல்கமீதுப் புலவர்
மைந்தன் மீறான் சாகிபு
மாணிலத் துற்றகவி வாணரா மதியமுன்
மருவுமின் மினிய நிகராய்
வள்மேவு மாமக்க நகர் பாத்தி மத்தர்சி
மா மாலையைப் பாடவே (10)

காப்புப் பருவம் முற்றிற்று.

# செங்கீரைப் பருவம்.

முத்தா லியற்றுமணி யாசனத்திருத்திவிண்
முழுமதிய மென விளங்க
மோனமா மணிகொண்ட கனகநற் குடமீது
முருக விழுநீ ரெடுத்துக்
கத்தனரு ளருமுறைச் சிரமீதிலே விட்டுக்
கண் கடை யிலஞ்சனத்தைக்
கவினுறத் தீட்டி நெய் தேய்த்து வெது விலைகொண்ட
கதிர்ப் படஞ் சுட்டியிட்டுப்
புத்தமுதை யூட்டிநற் பட்டாடை யிடைமீது
புகழுற வணிந்து கதிஜா
புவன ரட்சக மாது கையாலெடுத்து நற்
பூமுக முகக்கு மயிலே
சித்து நிலை கொண்ட மருமூது நபி பெற்ற கிளி
செங்கீரை யாடியருளே
திருவொளிவி லுருவான பாத்திமத்தரசியே
செங்கீரை யாடி யருளே (1)

பனிமகுட மீதுற்றுக் கடலாடை கொண்டபுவி
பதினொறு கோண மாடப்
பகருதற் கொண்ணுத வறுசிநெடு குறுசாடப்
பண்லவுகு கல முமாட
மணிமலர்த் துடவை சூழணி மாட மேவுசீர்
மருவு பொன் னுலக மாட
வண்டமரு மலரடவி முடிமீது தவழ்கின்ற
மாமுகிற் குலமு மாட
வணிமேவு தோகைக் கலாப மயிலிரு சிறகை
யழகுற விரித்து மாட

அரிய சுளைமுட்புறக் கனியை மத்தளமாக
அடி மந்தி கொட்டி யாடத்
திணிசுடர் கொண்டமணி நவரத்ன தீபமே
செங் கீரை யாடி யருளே
திருவொளி வினுருவான பாத்திமத் தரசியே
செங்கீரை யாடி யருளே (2)

அவ்வலக தாயுலகினுற்ற றசூலா னொளிவி
லாணி முத்தின் ரூபமா
யற்புதா நந்த மருவுந்தோகை வடிவா
யரும் புக ழெகின் மீதினிற்
சவ்விபெறவே விருந் தெழுபதாயிர மாண்டு
தனியனைத் தொழுதிறைஞ்சும்
தாவீ முகம் மதுறசூல் செய்த மாதவந்
தங்கி வடிவான தாயே
இவ்வுலகிலும் புகழ்ப் பாடு மெய்வாணருக்
கினி தருளளிக்கு முகிலே
ஈரேழு லோகம் புரக்கு மாதங்கமே
இத்தருண மீதி லணியாய்
செவ்வி பூத் திலகுமல ருபயகரமாடநற்
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி னுருவான பாத்திமத் தரசியே
செங்கீரை யாடி யருளே (3)

பண்டை நாளிறையவன் மண்ணோர் சிருட்டித்த
பாவாத மலை கிஸ்ல லாம்
பாலராம் சீது நபி கோத்திரத்தில் வந்த
பதி நாகு நபி பேரராம்
கண்டினு மினிதான வேதமி புருகீ நபி
கனதவத் தானுதித்துக்
கருணை குடி கொண்ட விழி தோன்ற லிஸ்மாயில் நபி
கதிமரபி லதுறனெனும்

விண்டுரைப் புகழ் பெற்ற ஹாஷீம் குலத்தினில்
வேந்தப்துல் முத்தலிபுமன்
வெற்றிமக னப்துலா நற்றவப் பாலராம்
வேத மஹ்மூது மகனாய்த்
தெண்டிரை யுடுத்தபுவி மீதுவரும் பவளமே
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி லுருவான பாத்திமத் தன்னையே
செங்கீரை யாடி யருளே (4)

புள்ளிவண் டினமதுவை யுண்டிசைப் பயிலுநற்
பொழிலட விசூழு மக்கா
புரமீது விண்ணவரு மண்ணுலக மீதிலுள
புனிதமுறு மாக்களெவரும்
விள்ளொணா மகிழ்ச்சி கொண்டே புகழ நற்றீன்
விளங்கப்பிறந்த நயினார்
விதுவைப் பகிர்ந்தமகு மூது நபி நாயகர்
மேன்மை வயதே யைந்தினில்
கள்ளவிழ் பூங்குழல் கன்னி கதிஜாவென்ற
காதலி வயற்றி லுற்றுக்
கண்களி மையாத விண்ணர் மாதரெவரும்
களிப் புறச் சூழ்ந்து போற்றித்
தெள்ளு மதியேயற் புரிந்திட வுதித்ததேன்
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி லுருவான பாத்திமத தரசியே
செங்கீரை யாடி யருளே (5)

மாதரி னகட்டினிடை தோன்றாத ஆத நபி
மனைவி ஹவ்வாவை நோக்கி
மண்ணு லகிலுந்தனைப் போலருந் தனியவன்
மாதரை வகுக்க விலையென்
றேத மறவே செப்பவானவர்க் கிறை வரக்
கேந் தலை கூட்டி சுவனத்
தேகி யொரு மாளிகையி லுட்சென்று பாருமென்
றிசை தர மொழிந்த வுடனே

ஆதவன் பிரபைபோ லிலகுங்மணித்த விசினிடை
அணியிள மாதிருக்க
அந்நாத ருபப விழி யாற் பார்த் தக மகிழ்ந்
தாரென முகம்மதி றருல்
சீத மக ளென்னுரைத் திடவுல கிலுற்றவா
செங்கீரை யாடி யருளே (6)
திருவொளிவி லுருவான பாத்திமத் தாசியே
செங்கீரை யாடி யருளே
முத்தினை நிகர்த்த மலர்ப் புன்னை யொடு செண்பக
மொய்த்த நற்புலவு மாவும்
மோன ரச முற்ற கொழு விஞ்சியொடு மாதுள
முதிர்ந் திலகு பூங்கதலியும்
பத்தியி னடர்ந்து செறி தண்டலை யுடுத்தமா
பதிமக்க நகர் வீதினில்
பருதியுத யம்போல் வருஞான தீபமே
பண்ணிற் சிறந்த மயிலே
கத்தனரு ளுற்ற சுவனப்பதி மடந்தையர்
கனமாய்த் துதிக்கு மணியே
காரணநிறைந்தமதி பூரண விலாஸவெண்
கல்புக் கிசைந்த கனியே
சித்திர மிகுந்த மதிதற்பார நந்தமே
செங்கீரை யாடியருளே
திருவொளிவி லுருவான பாத்திமத் தாசியே
செங்கீரை யாடி யருளே. (7)
பொன்னுலக மீதுற்ற பூங்குழல் குழையாத
பூவையர் புகழ்ந் தாடவே
புனிதநய குணமேவும் வானோர் களனுதினம்
போற்றித் துதித் தாடவே
இன்னிலத் தில்தோன்றுமுல மாக்க ளுரியோர்க
ளியல்பாய் பணிந் தாடவே
இங்கிதக்கற் புநிலையுற்ற பலமாதர்க
ளிதயங் களித் தாடவே

நன்னூ லிலக்கண மிலக்கி யந்தேர்ந்தகவி
நற்பா வலர் பாடவே
நதிவாரி சூழுலக மெண்டிசை புரக்கவரு
நபிநாத ரீன்ற மகளே
சென்ன லொடுகன்னல் விளையுமக்க நகராசி
செங்கீரை யாடி யருளே
திருவொளிவி னுருவான பாத்திமத் தாசியே
செங்கீரை யாடி யருளே. (8)

## கலிச்சந்த விருத்தம்.

செந்தாமரைநேர் வதனத் தெழுதிரு செஞ்சோதிகளாடத்
திருமா மணியினியற்றும் பணிகளிலங்கிச் சிறந்தாட
நந்தா மணித்தீபம்போல் விளங்குநயனத்தொளியாட
நல்லோர் துதிக்குஞ் சதுமா மறைநங் நாவுமசைந்தாடச்
சந்தஞ்சேர் வெண்பிறை நுதலாடச் சங்கைக் கரமாட
தங்கரத்னச் சிலம்பணிந் தொலிக்குஞ் சலசப் பதமாட
அந்தந்திகழ்தரு சிந்தாமணியே யாடுக செங்கீரை
அவனிபுகழ்ந்திடும் பாத்திமத்தம்மா யாடுகசெங்கீரை (9)

தற்பரிபூரணன் மேவியதிரு விருதய மாமணிவிளக்கே
தாபதருறைந்திடுமக்கா நகர்க்கோர்தரு சஞ்சீவினியே
கற்பூரவாடைக ளூற்றிடும் பூங்குழற் கதிஜா கண்மணியே
கந்தர நிழலிடை வந்திடும் சுந்தரஹறாமீம் நபிமகளே
பொற்பதி மாளிகைக்குள் ளிருந்தாண்டிடும் பூமானே தேனே
பொங்குங் கடலாய்வரு ஞானத்தின்பொருளுறும்பொக்கிஷமே
அற்புதமேவிய பொற்பத நங்கையே யாடுகசெங்கீரை
அவனி புகழ்ந்திடும் பாத்திமத்தம்மா யாடுகசெங்கீரை. (10)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

## தாலப்பருவம்.

அருணோதயம்போற் பிரபைதரு மழகாஞ் சுவனப் பதி மீதில்
அந்தந்திகழ் பசுமரகதத்தா லழுத்திப்பணித்த மாளிகைக்குள்
வருணமிகுந்த .முத்தினத்தை வாகாய்க்குயிற்றி கானிறுத்தி
வயிரமணியின் விட்டமதின் மாற்றிலுயர்பொன்வடந் தூக்கிப்
பெருமையுறு நற்றொட்டிலதிற் பெரியோனமைத்தவான் மாதர்
பெட்பாய்ச் சூழ்ந்துபுகழ்ந் தாட்டும் பிரசமூறுமொழிக்கனியே
தருமக்கடலே பாத்திமத்துஸ் ஸஃறா தாலோ தாலே லோ
தாஹீமிறசூல் பெற்றெடுத்த தாயே தாலோ தாலேலோ (1)

செங்கணெகினம் பயிலுமலர் செறிந்த தடமுந் துடவைகளுஞ்
சிறக்குமக்கா புரந்தனிலே சீமானப்துல்லா நுதலிற்
பொங்குதவமாய் நின்றிலங்கிப் புகழா ராமினாவயற்றிற்
பொற்பாயமைந்திப்பூதலத்திற்பொருந்துகு பிரின் வல்லிருளைத்
திங்களொளி போனீக்க வந்த செய்யிதருமதி றசூலின்
சிந்தாத்தவத்திற் பிறந்தநவச்செல்வப்பொருளேமுப்பொருளே
சங்கமுழங்குந் தடமதினா தாயேதாலோ தாலேலோ
தருமக்கடலே பாத்திமத்துஸ் ஸஃறாதாலோ தாலேலோ (2)

வானத் தலைவராம்ஜி புரீல் மாவாம்புறாக் கைக்கொண்டுவர
வள்ளலவ் வாகனத்தினிடை வளமாயேறிச் சென்று நல
மானும் பைத்தில் முகத்திஸில் மருவிவல்லோன் 'தனையிறைஞ்சி
மதிப்பாயிறங்கு நூலேணி வடிவார்படியின் மிதித்தறுசில்
தீனோர் வணங்கு முறைமைகளைச்!செவ்வியொருவனிடம்பேசித்
திரும்பிச்சுவனப் பதியழகைத் திறமாய்ப் பார்க்கும்போதங்கு
மோனமகளார் மாளிகையின் முறைபார்த்துவந்தார் தாலேலோ
முருக்கமலரி னிதழ்ஸஃறா முழுமாமணியே தாலேலோ. (3)

மஞ்சுதவழ்மேன் மாடங்களின் மலர்மானுலவு மக்கநகர்
மன்னர்முகம் மதிறசூலின் மனைவிகதிஜா நாயகியின்

மிஞ்சுதவத்தாலுதித்துலகின் மேவுந்தீனோர் மடந்தையரை
விருப்பாய்ச் சுவனப் பதியடைய மேலோனிடத்தில் மன்றாடுங்
கொஞ்சுங்கிளியின்மொழிக்கனியே குயிலே மயிலே ரஞ்சிதமே
கும்பநிகர்த்த குயங்குலுங்கார் கூடிவணங்கும் பதத்திருவே
சஞ்சீவினியே யெழுவகைக்குந் தாயேதாலோ தாலேலோ
தருமக்கடலே பாத்திமத்துஸ் ஸஃறாதாலோ தாலேலோ. (4)

செங்கைப்பெண்க ளிருபதஞ்சேர் சிலம்பின்னொலியுந் தீனோர்கள்
திறமாய்புகழுந் திக்றொலியுஞ் சிறுவரோது மறையொலியும்
துங்கப்புலவரொருவன் றனைத்துதித்துப் பாடுங்கவியொலியும்
தூங்கற்காலாட் கரிரதங்கள் துவண்டுமுழங்கும் பேரொலியும்
மங்கைக்கணங்கண்மணமுடிக்கும்வடிவாரொலியும்யாழொலியும்
வரிவண்டினங்கள் மலர்த்தேனை மாந்தியிசைக்குஞ் சீரொலியுந்
தங்கிக்கடனேரொலிக்கும் மக்கத்தலத்துக் கரசி தாலேலோ
தருமக்கடலே பாத்திமத்துஸ் ஸஃறுதாலோ தாலேலோ (5)

ஞானக்கடலே திருக்கடலே நல்லோர்துதிக்கு மருட்கடலே
நன்மையுரைக்குஞ் ஜெபக்கடலே நாவிற்கினிய பாற்கடலே
வானத் தலைவர் புகழ்கடலே வல்லோனுகந்த மணிக்கடலே
வரிசைசதுமா மறைக்கடலே வறுமைபகற்று நிதிக்கடலே
தீனின்பயிரை வளர்க்கு நன்னீர் சேருங்கடலே ஜெகசோதி
திருபான்வணங்குந்தவக்கடலே ஜெகத்தோர்புகழவருங் கடலே
தானநிலைமை பெறுங்கடலே தாயேதாலோ தாலேலோ
தருமக்கடலே பாத்திமத்துஸ் ஸஃறுதாலோ தாலேலோ. (6)

ஹ்றாஷீங்கிளைக்கோர்மணிவிளக்காமகிலந்துதிக்குமென்பெருமா
னகுமதிறசூல் தவமகளே யருமைக்குறைஷிக் குலக்கொழுந்தே
பாசமகற்றுந் தீனோர்கள் பாவைமார்கள் வணங்குமிரு
பதுமப்பாத வடிவழகும் பகரு மரஞ்சேர் கையழகும்
வாசமலர் போலானனமும் வயங்கும் பவள வாயழகும்
வள்ளலலியார்கண்டு வக்கவடிவுபொருந்து நாயகியே
தாசன் கவி கேட்டருள் புரியுந் தாயே தாலோ தாலே லோ
தருமக்கடலேபாத்திமத்துஸ்ஸஃறு தாலோ தாலே லோ. (7)

கண்ணின் மணியே செம்மணியே கல்புக் குளிர்ந்த நவமணியே
கனமாய்த் துதித்துநினைப் பவரிங் கவலையகற்று மருண்மணியே
வண்ண மணியே புகழ்மணியே மன்னரலியார் மணமுடிக்க
வாகாய்ப் பிறந்த திருமணியே மதிவான் மணியினோடிறைஞ்ச
மண்ணிற் பிறந்த மாமணியே மங்கை கதிஜாத் தருமணியே
மங்கா திலங்குஞ் சுடர்மணியே வையம் புகழ வருமணியே
தண்ணார் மணியே நன்மணியே தளைகுழும் மணியேதாலேலோ
தருமக்கடலே பாத்திமத்துஸ்ஸஃரு தாலோ தாலே லோ (8)

## கலிச்சந்த விருத்தம்.

ஆரணப்பொருளே ஞானவடிவமே யருண்மா மறையுணர்ந்தே
ஐம்புல னொடுக்கிய தவத்தோ ரனுதின மன்பாய் புகழ்நிதியே
பூரண திருப்பாற்கடன்மீதுறைந்திடும் பொன்மகளிறைஞ்சவரும்
பூவையெ நாவலர் மாதவர் போற்றிடும் புண்யநபிமகளே
சீரணி வாழ்வே யெனதிருதயத்தின் திகழ் சிந்தாமணியே
சிறியேனுரைக்குஞ்செந்தமிழ்க்கிரங்கிச்சிறப் பொருளெந்தாயே
தாரணி மாதர்களுவந்திடும் பொற் கொடி தாயே தாலே லோ
தருமக் கடலாம் பாத்திமத்தம்மா தாலோ தாலேலோ. (9)

செந்தேன் றுளித்துத் திகழும் வனசச் செழுமலர் வாவியுறை
சேலினம் வெடிபோய்க் கமுகின் குலையைச்சிதற வுழக்கிய பின்
வந்து முன் னெல்லையினுறங்கும் வளஞ்சூழ் மாமதினாநகரின்
மாதவர் வானவர் துதிக்கப் புரந்திடும் வண்மை நபி யிறசூல்
சிந்தை களிக்க வருந் திருசெல்வச் செல்வி சீமாட்டி
செய்பவத்திருளறத்தீனென்னும் கடலிடை ஜெனித்திடும் செழு
சந்தாபத் துயர் நீக்குந் தினகரா தாலோ தாலேலோ [மதியே
தருமக் கடலாம் பாத்திமத்தம்மா தாலோ தாலேலோ. (10)

தாலப் பருவம் முற்றிற்று.

# சப்பாணிப்பருவம்.

இகபரசுக மற்று ஞானவழி செல்பவரி
　　னிருதயக் கமலத் தினி
லின்புறத் தரிபட்ட வல்லவன் தன்னொளி
　　யிரண்டு பங்காய்த் திரட்டித்
திகழுற்ற வோர் பங்கை ரண்டாக்கி யதிலொன்றைச்
　　செப்பு மீரைம்ப தாக்கித்
திவ்விய வோர் பங்குகொண் டணிசுவன மாதரை
　　சிருட்டித் துமற்ற வெல்லாம்
தகைமை பெறுநபிமார்க ளரசரென வேதோன்றிச்
　　சநியினை வருத்து நயினார்
தாலீமுகம் மதுறசூல் முஸ்தபா மகிமை
　　தங்கு நற் புத்ரியாகச்
சகமீது முன்னோன் படைத்த பைங்கிள்ளையொரு
　　சப்பாணி கொட்டி யருளே
தானவ னருள்பெற்ற மோனமணி பாத்திமா
　　சப்பாணி கொட்டி யருளே (1)

பொன்னகா மதுக்கு நிகருற்றமா மக்க நகர்
　　புனித முதியோர் கள் கொட்டப்
புங்கமு றமிக்கித் துங்க மதிநாவலர்
　　போற்றிய புகழ்ந்து கொட்ட
நன்னயத் துறவறம் பூண்டதிரு நபிமார்கள்
　　நனிகர மசைந்து கொட்ட
நாதனொளி யாலுற்ற வானிலுறு மிமையோர்க
　　ளன்பாய்ப் புகழ்ந்து கொட்டக்
கன்ன லணிமொழிமுத்த வெண்ணகை கதிஜத்துக்
　　குடலக் கைகொண்டு கொட்ட

கருணைவிழி யிமையாத கூருனி மாதர்கள்
கல்பா லுகந்து கொட்டச்
சன்னப் பதிக்கரசி செங்கை வளை யோசை தரச்
சப்பாணி கொட்டியருளே
தானவன ருள்பெற்ற மோன மணி பாத்திமா
சப்பாணி கொட்டியருளே (2)

திருமருவு வயிரப் படஞ் சுட்டி யசையாமற்
றிகழு நுத லாடாமலும்
ஜீவகா ருண்யபர மாநந்த மேவுமிரு
சீர்விழிக ளாடாமலும்
பருமணி யழுத்து மிரு பிறையணிக ளணியுமுடி
பதிவுகொண் டசையா மலும்
பண்புநவ ரத்னப் பதைக் கங் களாடாமற்
பகருடல மாடாமலுங்
கருமுய லுறைந்த விண்மதியைப் பழித்ததிரு
கமல முக மசையாமலுங்
கண்கொண்டு பார்ப்பவரின் பாவமறவே செய்யுங்
காற் சிலம் பசையாமலுங்
தரும மிகவேகொண்ட பொற் கரஞ்சிவப் பூரச்
சப்பாணி கொட்டியருளே
தானவனருள் பெற்ற மோன மணி பாத்திமா
சப்பாணி கொட்டியருளே (3)

சோதியா யெங்கு நிறை யாதியலி யார்க் குற்ற
சோபனச் செய்திசொல்லத்
துரிதமா யிருதடவை கேட்டமர ரிறை வந்து
சொல நபி சொலி விடுத்தே
நீதமண மகர்சரி யல்ல வென்றிருதய
நினைத்தவை மொழிந்தபடியே
நெயடிவான் மதிபகரு மன்னீன்ற மாதரசி
நிலைமை மன்றுட்ட மதனல்

வாதை பெற வருமுடிவு நாளிலணி தீன்குல
    மடந்தை யர் செய்பவத்தை
மாற்றி நற்சுவனபதி சேர்ப்பனென் றமலன்
    வரைந்த வோர் பத்திரத்தைச்
சாதுநபி தானருள வாங்குமிரு கைகொண்டு
    சப்பாணி கொட்டியருளே
தானவனருள் பெற்ற மோனமணி பாத்திமா
    சப்பாணி கொட்டியருளே (5)

தேன்கசிந் தொழுகுமல ரம்பையொடு கன்னலும்
    செஞ்சுளைப் பனசமாவுஞ்
செறிதரப் பூகமுந் தென்னையுஞ் சூழ்ந்து திரு
    செம்பதும வாவி தங்கி
மேன்வடிவு கொண்ட மதினா நகர்க் கரசிகல்
    விண்ணகரினுற்ற துகிலை
மேதினியி லழகாயணிந்த நற் செல்வியே
    மேன்மை வர மெற்கீகுவாய்
பான்மதிய னேரெங்கு மருவுமுஸ் லீங்களின்
    பாவை மாரணி திலதமே
பார்மாது மலரினுறை பொன்மாது நிதநிதமும்
    பரவு மிருபாத மயிலே
தான்முத்த நிலவுமர விந்தமிரு கைகளாற்
    சப்பாணி கொட்டியருளே
தானவனருள் பெற்றமோன மணிபாத்திமா
    சப்பாணி கொட்டியருளே (6)

அற்புத மிகுந்த மஹ்மூது நபியிறசு
    லருந்தவத் துற்றமதலாய்
அணிமரு வுணற்சுவனப் பதியினுறு பட்டாடை
    பன்பாய்ப் புனைந்த மதலாய்
முற்பவ மியற்றுந் தீனரின்வை யர்பவநீக்கி
    முத்தியிற் சேர்க்கு மதலாய்

கற்பூரதீப நேர்வடிவு கொள் ளர மாதர்
 கழலடி துதிக்கு மதலாய்
கத்தனரு ளுற்றறஜிபுரீ லுசித சிறகிலிரு
 காலா னடக்கு மதலாய்
சற்குணமி ருந்தகதி ஜாபெற்ற செல்வியே
 சப்பாணிகொட்டியருளே
தானவன னருள்பெற்ற மோனமணி பாத்திமா
 சப்பாணி கொட்டியருளே (7)

வண்டின முரன்று தேனுண்டு வெறி கொண்டுசுதி
 மருவநல் லிசைப்பாடவே
வானரம் பூஞ்சோலை மீதேறிக் கைகொட்டி
 மாண்பாய்க் குதித் தாடவே
கண்டு களி மஞ்ஞை மிகு நிர்த்தனம் பண்ணவே
 கடைசியர் பார்த்து வந்து
கங்கண மணிந்த விருகைகொண்டு நாற்றினைக்
 கனமாய் பிடுங்கி நடவே
முண்டகத் தடவாவி சூழுநற் பழனமு.
 முருக்க மல ரொத்த வாயார்
முறையாய்த் திரண்டு விளையாடு மணி மாடமு
 மொய்க் குமதினு வாசியே
தண்டமிழ்க் கிரங்கி வரமருளு மதிநாயகிச்
 சப்பாணி கொட்டியருளே
தானவன னருள்பெற்ற மோன மணி பாத்திமா
 சப்பாணி கொட்டியருளே (8)

ஜன்னப் பதிக்கர சராமச னுசைனுக்குச்
 சந்தோஷ முற்ற தாயே
தருமநய குணமருவி யமுத மொழி பயினுமா
 தவமகிமை கொண்ட தாயே
மன்னுதி மன்னராயுலகி லுதயஞ் செய்த
 வள்ளல் நபி பெற்ற தாயே

மங்கைகட் கரசிதிரு நங்கை கதிஜாவிற்கு
மகளாய்ப் பிறந்த தாயே
பொன்னுலக மயிலனர் போற்றித் துதிக்குமிரு
பொற்பாத முற்ற தாயே
பூலோக மாதரைக் கதிசேர்ப்ப னென்றதிரு
புதுமொழி பகர்ந்த தாயே
தன்னக மகிழ்ந்து பொன் வளையலணி கைக்கொண்டு
சப்பாணி கொட்டியருளே
தானவன ருள்பெற்ற மோனமணி பாத்திமா
சப்பாணி கொட்டியருளே (9)

எங்கள் குறைஷிக் குலத்தின் மாதங்கமே
யேருற் றிலங்கு மயமே
இகபரமிர ண்டாசை யற்ற திரு முத்தமே
எந்தலர் புகழு நவமே
சிங்கார மேவு மெய்தங்கு பொன் மதியமே
சீருற்ற மெய்ஞ் ஞானமே
சிற்றடிய னுக்கருளுந் தற்பரா நந்தமே
செம் பதுமமா நிதியமே
மங்கா தெழுந் தொளிரும் வைர மணிரத்னமே
மறுவற்ற மாணிக்கமே
வண்ண முறுவை நேர்ய மேகருணை மேகமே
வளரு மணிநற்றீபமே
தங்கநிற மொத்தமெய் நபிபெற்ற செல்வமே
சப்பாணி கொட்டியருளே
தானவனருள் பெற்ற மோனமணி பாத்திமா
சப்பாணி கொட்டியருளே (10)

சப்பாணிப்பருவ முற்றிற்று.

## முத்தப்பருவம்.

மகரசல ராசியில் விளைகின்ற முத்துக்கு
மண்மீது விலையுண்டுமே
மத்தகக் களிறுபயவெண் கோட்டு முத்துக்கு
மாண் பாகவிலை யுண்டுமே
ஜெகதலத் துறைகின்ற நாகமணி முத்துக்குச்
செவ்வை யாய் விலை யுண்டுமே
செங்கனிகளைத் தரும் வாழையின் முத்துக்குச்
சீராக விலையுண்டுமே
தருமதுர கன்னலிடை வருகின்ற முத்துக்கு
தாட்டீக விலையுண்டுமே
தண்கனியி லுயிர்வான பவளவாய் முத்துக்குச்
சரியான விலையுண்டுமோ
பகவனரு ளுற்ற சரகின் மொழி பயிலு நற்
பதும வாய் முத்த மருளே
பச்சமயி லொத்த திரு பாத்திமா நங்கையே
பதும வாய் முத்தமருளே (1)

கலைகளுறு வெண்ணிலா வொளிரு நற்புவிமீதில்
கன தவத்தோர் வணங்கும்
கத்தனுரை கொண்டமர ரணிபெற வியற்றுமா
கதியுதவு கஃபாவினில்
நிலைபட்ட சிலைகளை யெடுத்துவன் குபிரிருளை
நீக்கிசன் மார்க்க வழியா
நேர்மை தருமூலமா மந்திரக் கலிமாவை
நிறைவாக மானிடர்க்குத்
தலைமையா யுரைதர மொழிந்தவரை மோட்சபதி
தங்கவைத் தாண்டபெருமான்
தாஸீமு கம்மதுற சூல் முஸ்தபா வீன்ற
தவத்தா லுயர்ந்த மயிலே

முலையமுது மாருது கமழு செங்கு முதவாய்
முத்தமே நித்தமருளே
மோன வடி வான மதி மாமுகப் பாத்திமா
முத்தமே நித்தமருளே. (2)

சுத்தபரி பூரணாநந்த மெய்ஞ்ஞானமாஞ்
சூட்சாதி யிறைவ னொளிவிற்
சுந்தர மிணைந்த சீருள்ளம் விடுத்தனர்
சோதி மதிரூப வடிவே
வித்தக மிகுந்த மாமதுரமொழி தாவூது
மேனபிக் குற்ற மறையும்
வீணாம் பிரவூனை வீய நற்கைகொண்ட
மேன் கம்பை யர வாக்கிய
முத்திபெறு மூஷா நபிக்கருளு மறையையு
மோன வீசா மறையையு
முதுபுகழ் பெற்ற நல் லாமீனா வீன்ற மகு
மூதுநபி மாமறையையுஞ்
சத்துவ குணங் கொண்டுவப் புடனோது செஞ்
சலசவாய் முத்தமருளே
தண்டரள வடிவாயிருந்த நபிபெற்ற கிளி
சலசவாய் முத்தமருளே (3)

காவணமுடுத்து வளமேவுதி மிசின்பதிக்
காவலன் கபீபாசனுங்
கடகரட விகடதட கைமலை நெருங்கவே
கலினவாம் பரிநெறுங்க
மாவண முறைந்த காலாட்களுந் திவ்வியகுண
மந்திரத் தலைவர் சூழ
மணியைக் கொழிக்கும் வெண்கொடி நிறுவுமணாருக்கள்
மன்னிப் பொலிந் திலங்கும்
பூவணத் தாலயம் பெறுமக்க நகர்வந்து
புகழாயுரைத்த படியே

புதுமை யுடனமவாசி யிரவினில் மதிதனைப்
புதிதாயழைத்த நபியைப்
பாவாவென் றெப்பொழுது மன்பா யழைக்கு நும்
பவள வாய் முத்தமருளே
பாவையர்க் கணிதிலக மான திரு பாத்திமா
பவளவாய் முத்தமருளே (4)

சொல்லுதற் கரிதான செல்வ மெந்நாளினுந்
தோன்றித் தழைத்து வாழ்ந்து
சோதிமணி யுற்ற சிங்காசனந் தனிலுற்ற
தூய குவை லீதரசனின்
வல்லதவ மகளான செல்வியோ ரிரவினில்
மாகன விற்கண்டபடியே
வளமேவு திரிபுவன ரட்சகத் தம்பிரான்
வள்ளலா மென்பிரானை
உல்லாச மான்மதங் கமழு மெய் நயினரை
யுவரி சூழுலக மீது
ஒளிகுலவு மஹ்மூது நபியை மாமங்கள
மொழுங்காய் முடித்துவந்த
சல்லாப மங்கை கதிஜாபெற்ற செல்வியே
சலசவாய் முத்தமருளே
சற்குணங் குடிகொண்டமணியான பாத்திமா
சலசவாய் முத்தமருளே (5)

அண்டமீ துறைகின்ற வெண்மையுறு முகிலின
மணியாய்த் திரண்டுசென்று
ஆழியற லுண்டு விணணேகி நற்சூலாகி
யரிதான மாரி பொழிய
முண்டகச் சுனைகளும் வாவியுமேரியும்
முறை மையாய் நீர் பொருந்தி
முத்தினந் தன்னை வெள்ளலை வாரி வண்டலின்
மோதிக் கொழிக்குமக்கா

மண்டலத் தெண்டிசையும் விண்டிசையும் போற்றவே
வந்த நவரத்ன மணியாம்
வன்மை தருமஞ்ஞான மிருணீக்கி மெஞ்ஞான
மதி நிகரு நபியினேடுக்
கண்டினு மினிதான வார்த்தைக ளுறைக்கின்ற
கமலவாய் முத்தமருளே
காரணப் பொருள் கொண்ட பூர்ணப்பாத்திமா
கமலவாய் முத்தமருளே (6)

என்னளு மொருகுடையி லகிலமரசாண்டிடு
மென்பிரான குமதிறகு
லிருதயக் கனியா யுதித்த நவநீதமே
இன்பரசமுற்ற தேனே
பொன்னல் வளர்ந்த மணிமாட கூடங்களும்
பூங்கமல மலர்வாவியும்
புயலினங் தவழு பூஞ்சோலையுஞ் சூழ்ந்திலகு
பொன் மதின மாபுரத்தில்
மின்னினிடையன்னநடையமுதமொழிகொண்ட விண்
மின்ன ருரைப்பொழுதினும்
வியன் பெறப் பணிவதற் குற்ற நற்றீபமே
விரத நய குண சீலமே
பண்ணளு நல்லருளளிக்குஞ் செம்பதுமநும்
பவளவாய் முத்தமருளே
பண்பின ரையாதரித்தாள வரும் பாத்திமா
பவளவாய் முத்தமருளே (7)

கற்பகத் தருவை நேர் பொற் பொருளளிக்கும்
காத்துடைய சீமாட்டி யென்
கல்புக்குவந்த நற்பொருளே யருந்தவக்
கனியே சிறந்தமயிலே
அற்புதா நந்தமே விற்பன மிகுந்தசீ
ரணிகொண்டுயர்ந்த் குயிலே

அண்டரிறை யொருபொழுது கொண்டுவரு நற்சுவன
மழகு நற்கனியானதைக்
கற்பூர வாடைகம ழகும திறகுலுசித
கரமீது நல்க நயினர்
கண்ணின் மணியென்றழைத் தருகிலுறவைத்துநற்
கனியை யழகாக வீயப்
பொற்கரப்பூ மீதுவாங்கிப் புசிக்குநம்
பொன் வாயின் முத்தமருளே
பூலோகமாதர் களணியுஞ் சிரோன்மணிப்
பொன்வாயின் முத்தமருளே (8)

நவஞ்சேர் மதியினொளிர்முத்து நவ்வினமலரிலுறை முத்து
நதியில்விளையுமா முத்து நளின மலரிலுறை முத்துங்
கவரிட்டுயர்ந்த வேய்முத்துங் ககனமுகிலி லுறுமுத்துங்
கடலிலுறையுமீன் முத்துங் கரிகடந்த வொளிர் முத்தும்
புவனமாள் வோரிம் முத்தைப்பொற்பாய்ப்பாத்துவிலைமதிப்பார்
புங்கத்திருவாய் நம்முத்தைப்பொருத்துமதிக்கத்தரமுண்டோ
தவஞ்சேர் புறுகான்மொழிவாயாற் றருவாய்முத்தம் நித்தமுமே
நைப்பிறிறகுல பாத்திமத்தே தருவாய் முத்தம் நித்தமுமே (9)

ஒலிக்குங்கடல் சூழுலகமதி லுதிக்கு மெங்கள் நபியிறசூ
லுள்ளமிசைந்த கதிஜாவி னுயர் நற்றவத்தால் வருமகளே
திலக்கும் பூங்காவனக்கொழுந்தேநிமலனுவந்த பொற்கொடியே
நிலவுதருமா மதிச்சுடரே நீட்சையுறுமிப் பூதலத்திற்
பலிக்குமுஸ்லி மடந்தயரைப் பண்பாய்த் துதிக்ககடைநாளிற்
பவக்க ளிக்கி யீடேற்றம் பரிவாய்ச் செய்வெனென்றதிரு
மலிக்கும் கொவ்வை கனிபோன்ற மலர்வாய் முத்தந்நித்தமருள்
மங்கா திலங்கும்பாத்திமத்தே மணிவாய்முத்தம்நித்தமருள் (10)

முத்தப்பருவ முற்றிற்று

# வாரானைப்பருவம்.

கத்துங் கடல்சூழுலகமதிற் கதிர்சேர்கிரணச் சுடரொளிபோற்
காணுங் கஃபதுல்லாவின் களிப்பாய் சென்றூறு நிமலனையே
சித்தங் கனிந்துதொழுதிறைஞ்சுஞ்செங்கையப்துல்முத்தலிபுச்
செய்யுந் தவத்தால் வந்துதித்த செல்வரப்துல் லாநுதலிற்
பத்தித் துலங்கிப் புவிமீதிற் பண்பாய் பிறந்த நபியிறசூல்
பாரிகதி ஜாபெற்றெடுத்த பதும முகத்துத் திருமதலாய்
நத்துமு மூங்குந் தடமதிறு நங்கைவருக வருகவே
நந்தா திலங்கும் பாத்திமத்து நவமே வருக வருகவே (1)

நன்மை விளக்குமுகில்வருக நல்லோர் துதிக்கு மயில்வருக
நளின முகத்துக் குயில் வருக நயனம் விளங்கு மணி வருக
தின்மை யகற்றி யருள் புரிய ஜெகத்திலுதித்த தேன் வருக
சேணி லுறைந்த மடவியர்கட் சிறப்பாய்த் துதிக்குமின் வருக
தன்மைக்குணமாய்ப்புகழ்வோரைத்தயவாய்ப்புரக்குங்கிளிவருக
சான்றோர் நித்தந் துதித்திறைஞ்சுஞ்சாண முடையதாய் வருக
மூன்னும் பொருளா மொருமுதலோன் முற்தேவருக வருகவே
முதியோர் புகழும் பாத்திமத்தே முன்னில் வருகவருகவே (2)

சந்தமிகுந்த சங்கினங்கட்ட வழ்ந்து திரியுஞ் சலாசித்
தானைபுனையும் புவியிலுபர் தலமா மக்க நபி மகளே
கந்த மலர்த் தொட்டினிலுறைந்து கண்கண்மூடி வுறங்கிடவே
கலிமா விரலைச் சுவைத் துறஞ்சிக் கடவாயமுத மொழுகிடவே
விந்தை யனையார் முகம்பார்த்து விள்ளும் பதுமமலர் வாயார்
வியப்பாய் நகைக்க வவரெடுத்து விளையாடிடு நந்நாயகியே
சிந்தாமணியே மும்மணியே சீராய் வருக வருகவே
தீனோர் புகழும் பாத்திமத்தே சிறப்பாய் வருக வருகவே (3)

கருமமுறை கைவிரலாழி தரிக்க வருக பொன்னரைஞ்ஞாண்
தத்துநிகரு மருங்கெட்டிர் தாமாயணியத் தான்வருக

திருவார் கமலப்பாத மிசைச் சிலம்பைப் பூட்டவருக வொளி
டிகழுஞ் சுட்டி யெழுத நுதற் சிலையிலணிய வருகநறை
மருவார் செழியமார் பிடத்தில் வடங்களணிய வருகவரி
வண்டைப் பழித்த கண்ணிடத்தில் மையை யெழுதவருகவெகு
கருணையுட னேமொழிந்திட பூங் காவே வருக வருகவே
காசிமிற சூல் பெற்றெடுத்த கண்ணே வருக வருகவே (4)

கருமை நிகருஞ் சிரசிடத்திற் கலவை தைலந் தேய்ப்பதற்குக்
களிப்பாய் வருக கதிமெய்யிற் களபமெடுத்துப் பூசுதற்கு
வருக உயர்ந்த சிற்றாடை வாகாயுடுக்க வருக வொரு
வசன நவிற்ற வருக மடி வதிந்து வெண்பாலுண்பதற்குத்
திருவைப் பழித்த தாய்வருக நிரோர்குலத்துப் பெண்கள்பவத்
திமிரமோட்டு மதி வருக சிந்தைகளித்து நினைப்பவரைத்
தருமகுண மாயாதரிக்குந் தாயே வருக வருகவே
நவத்திற் சிறந்த பாத்திமத்துஸ் ஸஃறாவருக வருகவே (5)

செம்மை பொருந்துந் திருமார்பிற்சேர்ந்தபதைக் கஞ்சுடர்காட்
டிங்கணிகருமுகநுதலிற்றிகழுஞ் சுட்டி யொளி காட்ட [டத்
இம்மை மாதர் தமைத்தாங்கு மிருகையாழி யொளிகாட்ட
இலகுஞ் செந்தாமரை போன்றயிருகாற் சதங்கையொளிகாட்ட
மும்மைபுரக்கு•நபியிறசூல் முகக்குந் திருவாய் யொளிகாட்ட
முடியிலிரு பாலணியுமணி மோனப் பிரபை யொளிகட்டக்
கொம்மைப் பெறமேவ தவழ்ந்திங்குக்குணமாய் வருகவருகவே
குறைவில்க்கொழுந்தே பாத்திமத்தேகோ தாய்வருகவருகவே (6)

விள்ளுமரி வாட்டனைராவி விரவிற்சாலி தனையரிந்து
மெதுவாய் கட்டிக்களஞ் சேர்த்துவிரிந்தமருப்பின் பகடிணக்கிக்
கொள்ளைப்பிணையற்கொண்டடிக்கக்குதித்துத்தெரித்தமுத்தினை
கும்பத்தனத்து புள்ளியர்கட்குணமாயெடுது கணவரிட [தைத்
முள்ளமகிழ்ந்துகொடுக்கவ வருவப்பாய்வாங்கி மதிப்பவர்பா
லுதவிநிதியம் பெற்றுவள மோங்குமதினநகர் விளக்கே
தெள்ளும் பொருளே தவப்பொருளே திருத்தாய்வருகவருகவே
செய்யிதிற சூல்பெற்ற திருச்செல்வி வருக வருகவே (7)

கண்ணின் மணியேவருக வென்றன் கல்புக்கனியே வருக புவி
காக்கும் பொருளேவருக மறைகலைஞர் துதிக்குங் கடல்வருக
விண்ணிற் பொருந்துந் தருவருக மெய்மைத் தவத்தின்மின்வருக
வேலைசூழ் மானிலமெல்லாம் விளங்கவுதித்தச் சுடர்வருக
பண்ணிற் சிறந்து தேனொழுகும் பதுமத் திருவாய்மான் வருகப்
பரிவாய் பாடித்துதிப்போர்க்குப் பதவியருளுமணிவருக
தண்ணார் கனியே பாத்திமத்துஸ்ஸஹ்றாவருக வருகவே
தாலந் தழைக்கக் கருணைசெய்யுந் தாயே வருக வருகவே (8)

செழுமா மலர்த்தேன் பொழிந்து விணிற்செல்லுந்துடவைமுடி
செறிந்தகன்னலட்டபுகைச் சேர்ந்துவிளங்கக்குயினென்ற[மீது
குழுவாய்த் திரண்டு மயிலினங்கள் குலவுஞ்சிறகை விரித்தாடக்
குன்றம் பொருவா மணிமாடக் குடுமீ மீது விண்மதியந்
தழுவிச் செல்லு முறைகண்டு தங்கமலைநேர் புயமன்னர்ச்
சந்தமனை யார் முகவடிவைச் சார்ந்தாரிலையென்றே நகைப்பார்
வழுவொன் றில்லா வளமதினு வாழ்வே வருக வருகவே
வள்ளலிற சூல்பெற்ற சிரோன்மணியே வருக வருகவே (9)

கண்ணொளி வழுக்க வெகுமணி பலவழுத்துநற்
கனகபதி தாய்வருகவே
கடலாடை கொண்ட புவி மீதிலுறை தீனோர்கட்
கண்ணிலுறு மணிவருகவே
விண்ணோரியற் றுகஃபாவுற்ற மக்க நகர்
மீதுதய மதி வருகவே
விமலன் படைத்தநல் லீரேழு லோகம்
வியக்கு நிதிமலை வருகவே
கண்டினு மினிதான வெருமொழி பயிலுநற்
காளையலி மனைவருகவே
தண்ணம்பு யத்துவிழி கருணை கொளுமரசியே
தயவு கொண் டேவருகவே
தாஹிமுகம்ம துநருல் பெற்ற பாத்திமா
சடுதியா யிங்கு வருகவே. (10)

வாரானைப் பருவ முற்றிற்று.

## அம்புலிப்பருவம்.

ஒளியுதய மாகநீவெட்கு வாயிக்கிள்ளை
யுடலொளிவு மறையாதுகாண்
ஓங்குநற் புயலினுன் மரைகுவா யிச்செல்வி
யொரு நாளு மறைகிலாட்காண்
அளவிலா மீனுண் டுனைக் கிந்த மாதினுக்
கதிக மூமீ னனந்த
மந்தமான் முயலுண்டுனக்கு மேலன்னைக்
ககத்தி லீமானு முண்டு
வளமை யொரு முதலைத் துதிக்கு முறை நிற்கந்த
வ தனைக் காணு மித்தாய்
வாரிமீ தெழுவைநீயீரேழு லோகம்
லைஞ்சுற்றி வருமரசிகாண்
அளவிடற் கரிதான மாதவச் செல்வியுட
னம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
னம்புலி யாடவாவே. (1)

சேனுலகி னதிகாரிநீ யிந்தமான் மூன்று
ஜெகமாளு மதிகாரிகாண்
சீருற்ற பதினாறு கலையுண்டுனக் கதிக
சீதகலை யறுபத்திநாற்
பூணுமதி யிவராகுநற் போத முனக்கில்லை
புகழ்ஞான முண்டிவர்க்கே
பொற்பதி மடந்தையர் பரவித் துதிக்குமிரு
பொன் னடியிவர்க்குண்டுகாண்
வாணரிசை புகழ்பெற்ற மங்கை கதிஜாவீன்ற
வடிவான தோகை யிவர்காண்
வாரிசூ முலகமுடியும் வேளை திநேர்கள்
மாதரைக் காப்ப திவர்காண்

ஆண்ணழ கரலிமனைவி யாகவரு மாதினுட
    னம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத்தன் னையுட
    னம்புலி யாடவாவே. (2)

பூதலத் துறைகின்ற கொடிய வல்லிருளைப்
    போக்கத் துணிந்து வருவாய்
புங்கமுறு மாக்களுள மஞ்ஞான மிருண் ணீங்கப்
    பொற் பாயுதித்த திம்மான்
சாதுசற் குணமுண்டுனக் கிந்த மின்னுக்குத்
    கருசத்வ குணமுண்டுகாண்
தன்வடிவு குறைவுண் டுனக் கிந்த மங்கைக்குத்
    தன்ரூபங் குன் றுதுகாண்
பாதமறு நெட்டார வின்பகை யொனக்குண்டு
    பார்மீதி லிந் நாயகிப்
பங்கையச் சரணம் புகழ் வோர்க்கு மப்பகை
    பாராதிழிந்து செல்லு
மாதலா லிச்செல்வி பதமருவி யெப்பொழுது
    மன்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத்த ன்னையுட
    னம்புலி யாடவாவே (3)

மக்கம்பிற ந்தநபிவுபய தாண்மலருற்ற
    வடிவநிற் குண்டு மந்த
யன்னரணி திருமெய்யிலழ காய்பொருந்து மிரு
    மலரடிக ளுற்ற திம்மா
னெக்காலுநிலையிலை யுனக்கிந்த மாமயிலுக்
    கெஞ் ஞான்று நிலையுண்டு காண்
இரவிலொரு பொழுதரசு செய்கு வாயிம்மாதுக்
    கிரண்டு பொழுதரசுண்டுகாண்
முக்கியப் பிரபல முனக்கில்லை நங்கைக்கு
    மோனப் பிர பல்யமுண்டு
முத்திதரு மகிமைநிற் கிலையிந்த மானுக்கு
    மோட்சமருட் டைவமுண்டுகாண்

ஹக்கனருட் பெற்றதிரு வுலக மாதாவுட
　　னம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
　　னம்புலி யாடவாவே. (4)

தண்ண முதையிரு சிறகு நேமியம் புள்ளுணத்
　　தானீகு வா யிந்தமான்
சலசவாய் வெண்ணமுதைத் தீனோர்களிடரெலாந்
　　தவிரத் தெளித்து நிற்பார்
வண்ணச் செழுங்குமுத மலர் விரிய வருவை இம்
　　மான் மறை விளங்க வருவார்
வானிடைத் துறைகுவாய் மழலை மொழி பயிலுமிம்
　　மாதுபொன்னுட்டி லுறைவார்
கண்ணகஞ் ஞாலமுளத் காண்கவருவாய் செல்வி
　　ககனு ளருங்காண்க வருவார்
கருணைவிழி மாதரசி போலாவ தருமை நீ
　　கடிகைகுள் ளிங்கு வந்தே
அண்ண லொலிமார் தோன்ற வருமுசித தாயினுட
　　னம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
　　னம்புலி யாடவாவே. (5)

குறைஷிக் குலத்தோற்க ளென்ற றடமிசை பூத்த
　　கோக நக மலர் நாயகிக்
குன்னென்ற மொழியினு லெல்லாம் படைத்தவொரு
　　கோனருட் பெறு நாயகி
தறைமுடி யுநாளையின் மாதரைக் கதிசேர்க்கத்
　　தவமிகப் பெறு நாயகி
ஷரகு நெறி வழுவாத பெரியோர்க ளொலிமார்கட்
　　டனைய ராய் வரு நாயகி
மறைவலர் கவிபாடு நாவலர் போற்றவே
　　மாதவத் துறு நாயகி
மங்கைகட் டிலதமுறு செங்கை கதிஜாநங்கை
　　மகளெனப் பெறு நாயகி

அறையாழி சூழுலகு போற்ற வருமாதிநே
டம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
னம்புலி யாடவாவே (6)
நீராழி கொண்டபுவி மீது செங்கோல் புரியு
நீதி முறைமைய யறியலா
நிமலனுன் மொழிகின்ற சதுவேத ஞானத்தி
னிட்சயச் சொல்லறியலாந்
தாரார்ந்த பூங்குழற் குழையாத கன்னியர்
தழுவு மிருபத மறியலாம்
தரைமுடியு நான்மட்டு வருசெய்தி யாவையுந்
தத்துவத் துட னறியலா
மோராளமான பல புதுமைக ளனைத் தையு
மியல் பாய்த் தெரிந் தறியலா
மிசைவுற்ற நின்களங்கம் மாற்றி நல் ரூப
மேந்து முபதேச முறலா
மாராய்த லுள மேவி யற்பு தந் தெரிவதர்க்
கம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
னம்புலி யாடவாவே (7)
ஆண்டாண்டு தோறுமே கைதை முள்ளெயிற்றா
வணிகியுனைத் தீண்டாமலு
மம்புயப் பதிகண்டு வெட்கு முறை யகலவு
மழகு கலை குறை யாமலுந்
தாண்டு திரை மீதிலெழு வடகோடு தெங்கோடு
சாயா திலங்கி வரவுந்
தண்மாரி பொழிகருமை முகிலினுன் மறைகின்ற
தன்மை யுனைவிட்டகலவும்
பூண்டவுன் னிடரெலாம் நீங்கி நற் புகழைப்
பொருந்து வர மகிமை பெற்றே
போகலாமா தலால வசியம் வந்து நீ
பொற் சிலம்படி பணிந்தே

ஆண்டவன ருட்பெற்று மேன்மையுறு மாசியுட
னம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத் தன்னையுட
னம்புலி யாடவாவே (8)
படியாடை கொண்ட வெழுவாரியில் விளைகின்ற
பண்முத்து மணியநேகம்
படமருவு செட்டரா வுமிழ் கின்ற முத்தாற்
பயிற்று மா மணிய நேகம்
வடியுகர் தேன் பொதிந் தலறு மர விந்தம்
வழங்குமா முத்தனேகம்
வாகுற்ற கன்னலொடு செந்நெ லிடைவருகின்ற
வளமுத்து மணியநேகம்
உடுவினற சானவுன் றன்னிலும் வெகுகோடி
ஒளிவீ சிலங்குகின்ற
உன்னதம் பெற்ற தலமா மதின மீதிலுன்
னுடற் குறை யகல வந்தே
அடிமுடிவிலாத வொருவங் கருணை மயிலிமீனு
டம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்திமத்தன்னை யுட
னம்புலி யாடவாவே (9)
முன்னுளி லிறையொளிவி லபிபுலா மீமுற்ற
முறுசனபி பெற்ற மகளார்
மூவ்வுலக மும்போற்ற நல்லரசு புரிகின்ற
மோனநபி பெற்ற மகளார்
பன்னுளுந் தீனேர்து திக்கப் பிறந்தனற்
பயகாம்ப ரீன்ற மகளார்
பாரிலெழு வகையுயார் பொதிந்த மெய்கமழுவரு
பண்பு மகமூது மகளா
செங்காளுமேற் றித்து திப்பவரினி தயத்
திலங்கு நபி பெற்ற மகளார்

ரோவுமல் கியாமத்தி லொருவ னிடம் வேண்டி யீ
டேற்று நபி யீன்ற மகளா
ரந்நாளு மெந்நாளுஞ் செல்வியோல் வாயாதிங்
கம்புலி யாடவாவே
அழகுற்ற நபிபெற்ற பாத்தி மத்தன்னையுட
னம்புலி யாடவாவே.

அம்புலிப்பருவ முற்றிற்று.

# அம்மானைப் பருவம்.

முத்துநிறை ரத்தின புட்பரா கத்தினொடு
முதிய வொளி வைடூர்யமு
முறையாய்ப் பதித்துப் பொன்னாற்செய்தவம்மனையை
முண்டகக் கையிலேந்திச்
சித்தாக விடசாரி வலசாரியாய்ப் போட்டுச்
சிந்தை களி கொண்டு வப்பாய்ச்
சேமமுறு நற்குறைஷி யங்குலத் தருவினிடை
திகழுஞ் செங்கனி யாகே
நத்தின முழக்கரு வாவிசூழ் மாமதின
நகரி லுறை செழு மதியமே
நம்புவரை யாதரித் தாழ்கின்ற வரசியே
நவிலு தற்கரிய பொருளே
அத்தனரு ளுற்ற சீர்மங்கை யிருகை களா
லம்மானை யாடியருளே
அம்பரமு மிம்பரமும் புகழ்பெற்ற பாத்திமா
அம்மானை யாடியருளே (1)
சீதநற் றாமரைத் தடமருவி நற்சுவைச்
செந்தேன் றுளித்து விண்ணிற்
செல்லு மலரடவி சூழ் மாமக்க நகரிலுறை
செம்மலப் துல்லா மகவாம்

பூதரத் தொத்தபுய காசிமிற சூல் நபிப்
புறுகானின் மறை யானதைப்
புவியிலு றதீன்குலப் பெண் களுக் கன்புடன்
பொற் பாயுரைத்து மவன்ரக்
காதல்கொ ண்டெப்பொழுதும் ரட்சிக்குஞ் செல்வமே
கருணை விழி கொண்ட கிளியே
கருமுகிற் குழலணங் கார்க ளெப் பொழுதுமே
கவினுறப் போற்றுமயிலே
ஆதவனொ ளிவுகொண்டலர்ந்த பூங்கை களா
லம்மானை யாடியருளே
அம்பரமு மிப்பரமும் புகழ்பெற்ற பாத்திமா
அம்மானை யாடியருளே (2)
ஒளிவாகித் தெளிவாகி முத்தாகி மயிலாகி
உயிரண் டபிண்ட மாகி
ஓங்கார கம்பத்தில் நீங்காத ஜெகசோதி
யுற்ற லாமலிபு மாகித்
தெளிவாகி மீமாகி முச்சுடர் தானுகித்
திரை கொண்ட கடலுமாகித்
திருவாகி மலையாகி யெழுவகையி னுயிராகித்
திங்க ளொடுரவியு மாகி
வெளியாகி மனுவாகி நினைவாகி மனமாகி
மெய்ஞ் ஞான குருவுமாகி
வேதமொடு பொருளாகி வந்த மஹ்மூது நபி
மேதினியி லீன்ற குயிலே
அளிமுரலு மலர்வாவி சூழ்மதின வாழ்வரசி
யம்மானை யாடியருளே
அம்பரமு மிம்பரமும் புகழ்பெற்ற பாத்திமா
அம்மானையாடியருளே (3)
பல்லாயிர ங்கோடியண்டம் படைத்த வொரு
ப்ரமனுற் சொன்ன மறையைப்
பண்புற்ற விண்ணோர்க ளிறை ஜிபுரில் கேட்டிந்தப்
பார் மீ திமைக்கு முன்னர்

நல்லொளி வுதிகழவந் துறைதா வுணர்ந்து மிகு
நன்மையா யாவருக்குந்
நளின் மலரொத்த திருவாய் திறந்த முதநேர்
நவின் றிடு முகம்மதிரசூ
இல்லாச மாயுபய கற்பகக் கையினு
லுன்னதத் துடனெடுத் தே
ஒளிவீசு மதிவதன முத்தமிட் டந்தண
முரைத் திட வுதித்த கிளியே
அல்லலற மாதரைக் கதி சேர்க்கும் கைகளா
லம்மானை யாடியருளே
அம்பரமு மிம்பரமும் புகழ் பெற்ற பாத்திமா
அம்மானை யாடியருளே (4)
உவமை யிலடங்காத மெய்வடிவு குன்றாத
ஓங்கலிரு தனங் குலுங்கா
ஒண்டொடியர் பொன்மலரை மாரியெனவே பொழிந்
தொளிர்ப் போற்றி நிற்கப்
புவனமுறு மாமங்கை யவுதாது நஜபாக்கட்
போற்றிப் புகழ்ந்து நிற்கப்
புதுமைபெறு மிறையோனின ருளுற்ற சகுபாக்கட்
பொற் பா யுவந்து நிற்கத்
தவமகிமை கொண்ட சற்குரு வாயுதித்துமதி
தன்னை வரு வித்த நயினர்
தண்டாள நக்கமதுர மொழிபயிலு மேன்மைகதி
ஜா வென்ற தாயு மகிழ
அவனியோற் களிகொள்ள செம்பதும கைகளா
லம்மானை யாடியருளே
அம்பரமுமிம்பரமும் புகழ் பெற்ற பாத்திமா
அம்மானை யாடியருளே (5)
எழுவைகத் தோற்ற மொடு மருவிவாழ் மெய்கமழு
மெங்களிற சூல் மணந்த
எந்திழைக் கதிஜத்து மாதீன்ற னைனபொடு
ஏழிலுற் றங்கை யாவும்

பழமதுர வாயும் முல் குல்தூமையும் பெற்றுப்
பார்த்திபற் காசிமையும்
பகருதற் கொண்ணுத தையிபொடு தாகிறும்
பண்புறப் பெற்ற பின்னர்
முழுமதிபி லும்வடிவு கொண்டநற் கிள்ளையாய்
முப்புவன மாளரசியாய்
முத்திதரு மஞ்ஞையா யாவருந் தவமியல
மூதறிவு பொழியு முகிலாய்
பழிவிலா னருளிஞ லீன்ற திருநங்கையே
அம்மானை யாடியருளே
அம்பர மும்பரமும் புகழ்பெற்ற பாத்திமா
அம்மானை யாடியருளே. (6)
மஞ்சடை கிடக்குமணி மாடகூடங்களணி
மருவிப் பொலிந்த நகர
மாணிலப்பா ப்பிலுறு தீனோர்கடாஞ் செய்த
வன்பவப் பிணியை நீக்குஞ்
சஞ்சீவி போன்ற கஃபா வென்ற வாலையந்
தங்கிச் சிறந்த நகரம்
ஷாகு நெறிவழுவாத பெரியோர்க ளொலிமார்கட்
டவமியலு நன்மை நகரம்
வஞ்சகங் குடிகொண்ட குபிரோர்க ளணுகாமல்
மடிந்தோடு மேன்மை நகர
மங்கள முழக்கி னொடு மும் முரசி னொலிகளு
மாறு தொலிக்கு நகரம்
அஞ்சலச வாவிசூழ் மா மக்க நகாரசி
அம்மானை யாடியருளே
அம்பரமு மிம்பரமும் புகழ் பெற்ற பாத்திமா
அம்மானையாடியருளே (7)
தக்கசக் கர வாளகிரியி னொடு மேருவுந்
தன் னிலமை தானசயவே
தரியல ரொடுங்கவே நாக முடி நெறுநெறன
சகமுழுதுமே குலுங்க

முக்கியப் பிரபை தருமேழுபரி யோன் கிரண
    முழுது மறை பட்டு மங்க
மோது மலைவாரி தியினீர் வரண்டளறுக
    முகிலினஞ் சிதரியோட
உக்கிரங் கொண்டு மனவேக முறங்தூல் தூலா
    முன்னிமை நாடத்து நயினர்
உழுவை வடிவா யறுசி லவதார மானசீ
    ரோங்கு மலியார் மணக்கக்
கக்கனரு ளாலுதயமான சீரன்னையே
    அம்மானை யாடியருளே
அம்பாரமு மிம்பாரமும் புகழ் பெற்ற பாத்திமா
    அம்மானை யாடியருளே (8)

சோதி நீ சோதியுறும் வீடு நீ ஜெகமெலாஞ்
    சொல் லொணுப் பொருளு நீயே
சூட்சநீ சூட்சாதி தவமு நீ யாவற்க்குஞ்
    சுருதி நிலை காட்டு நீயே
நீதிநீ நீதியுறு குணமுநீ மெய்ஞ்ஞான
    நிகழ்த்து நங் நாவு நீயே
நிமலிநீ நிமலனருட் செய்கை நீ வன்மையை
    நீக்கி யருளுட்டு நீயே
சாதநீ சாத முறைதலமு நீ சம்பூர்ண
    சச்சிதா நந்தி நீயே
சத்து நீ சத்துவக் குணமு நீ யென்று நற்
    தயவுற்ற தாயு நீயே
ஆதிநீ ஆதியைத் தெரிசிக்குங் தவமுநீ
    அம்மானை யாடியருளே
அம்பா முமிம்பாரமும் புகழ் பெற்றபாத்திமா
    அம்மானையாடியருளே (9)

வண்டு தேனுண்டு பண் முரலு மலரடி விசூழ்
    மக்கநபி பெற்ற மகணீர்
வானத் தலைவருடன் பாரலென்ன வோர் மொழி
    வழுத்த வர முற்றதுவு நீர்

எண்டிசை யிலுள்ள வரு நற் பதவி பெறுவதற்
 கேற்றித் துதிப் பதுவு நீர்
இம்மைக் குமறுமைக்குந் தணியாத சுடராக
 விலங்கு மணி மாதாவு நீர்
பண்டோ ளிறையவ னொளி யாற் படைத்தமரர்
 பதிமீது வைத் ததுவுநீர்
பாடித் துதிக்கு மிவ் வடிய னுக்கதிக நற்
 பலனைக் கொடுப்பதுவு நீ
ரண்ட புவனங்களைப் புரக்கவருஞ் செல்வமே
 அம்மானை யாடியருளே
அம்பரமும் மிம்பரமும் புகழ்பெற்ற பாத்திமா
 அம்மானையாடியருளே (10)

அம்மானைப் பருவ முற்றிற்று

## நீராடற் பருவம்.

ஒண்டொடி யணிந்த நல்லுபய கரநிக ரான
 ஒண்பதும மலாசவே
ஓங்கு மிருகருணை விழி நேரொத்த சேலின
 மொதுங்கி விண் ணெடிபாயவே
தண்டரள நகை பொதிந் தலறு செம்பவளவாய்
 தன்மை பெறுகு முதமசையச்
சலதரக் குழலொத்த பசிய சைவல மசைபந்
 தண்ணலை புரண்ட சையவே
பண்டொரு வனொளியா லமைத்த நம்மிடையினோர்
 பண் மலர்க்கொடி யசையவே
பரிவுற்ற முச்சுடரு மொவ்வாத நம் மேனி
 பலனுறக் குளிர் வதற்கே
வெண்டிரை முழக்கரு வளமதின நகர் வாவி
 வெள்ள நீ ராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள் ளருளான பாத்திமா
 வெள்ள நீ ராடியருளே (1)

முத்தா யிருந்து பின் வட்டமிடு பணி வெருள
மோன மயி லுருவமாகி
முறைதர ப்பல்லாண்டு நல்லெகின் றருவிலோர்
முதலைத் துதித் திருந்துச்
சித்து நிலை கொள்வதற் குத்தம குணத்தராய்ச்
செகமீ துதித்த நயினர்
திருமணஞ் செய்வதற் குரிய தவ மே பெற்ற
தேவி திரு மங்கை கதிஜா
வித்தலத் திடையீன்ற வற்புதா நந்தமே
யிருவிழிக ளிமையாதவ
ரேற்றித் துதிக்கவரு நற்றவப் பீடமே
யிலகு நற் கமுகு தெங்கு
மெத்தப் பொருந்து மாமதின நகர் வாவியின்
வெள்ள நீ ராடியருளே
மெய்ஞ்ஞான வடிவுகொள் ளருளான பாத்திமா
வெள்ள நீ ராடியருளே (2)

கான் மலரணிந்த பூங்குழ லுற்ற பூவையற்
கதிகொண்டு லாவி நிற்கக்
கானு மேன்மாட கூடங்களுங் கன்ன லுறு
கழனியு மிருந்த திமிஷிக்
கோன் மகிமை மாமக்க நகர்வந்து புனித முறு
குரு நபியை வர வழைக்க
குணமாக விடு தூதனவ்விடத் தேகி யுழை
குறை வர மொழிந்த நயினர்
வான் முகிற் கவிகை யிடமதிபோ லெழுந்துவரு
மலரடி வணங்கி விள்ள
மன்கேட்டு ணர்ந்தோத விடருற்று விமலனிட
மறுகித் துவா விரக்கு
மேன்மை யொளி யுற்ற கதிஜா பெற்ற செல்வமே
வெள்ள நீ ராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள்ளருளான பாத்திமா
வெள்ள நீராடியருளே (3)

விருத்தை யாங்கிழவி யைப் பதினறு வயதுள்ள
மெல்லிவடி வாக்குதற்கு
விமலனி டமேந்தித் துவா கேட்க்கு மென்பிரான்
மேலுபாத் தார்கும ளவிற்
கருத்துக் கிசைந்த கனியென்ற மைத் தருகினிற்
கவினுற விருத்தி யென்றன்
கண்ணின் மணியே யிந்தப் புவியை விட்டிறைவன்பாற்
கனமுற வடுத் திருக்கப்.
பொருத்த முறுநாளாகு மென் றென் றியம்பவே
புண்க ணுறப் பார்த் தெவர்க்கும்
புகழாக முன்ன தாய்ச் தெரிசிப்பை யென்ன என்று
புகலு மொழி கேட்கு மயிலே
விருத்தமறை குடி கொண்ட மாமணித் தீபமே
வெள்ள நீ ராடியருளே
மெய்ஞ்ஞான வடிவுகொள் ளருளான பாத்திமா
வெள்ள நீ ராடியருளே (4)

வாரிதிரை யாடையாயணிகின்ற புவிமாது
மாவதன மாகு மதினம்
வல்லனர சாள்கின்ற அறுசுக்கு மேலாக
மாதவம் பெற்ற மதினம்
சீரியப் பொருள் கொண்ட மக்கமர் நகரினுஞ்
சீருற் றுயர்ந்த மதினம்
சிந்தாத் தவம் பெற்ற பைத்துல் முகத்திஸ்
திருப் பள்ளி மேன் மை மதினம்
ஆரியனை யொத்திலகு பைத்தில் மஃறமூறென்ற
ஆலயத் தரசு மதினம்
அளவெடுத் துலகினிற் சொல்லுதற் கரிதான
அந்த மிக மேவு மதினம்
வேரியஞ் சலசமொடு குமுத மல ருறைவாவி
வெள்ள நீ ராடியருளே

மெய்ஞ்ஞான வடிவுகொள் ளருளான பாத்திமா
வெள்ள நீ ராடியருளே (5)

பச்சை மரகத வைர மாணிக்க முத்தம்
பதித் திலகு பொற் றொட்டினிற்
பண்பாயி ருத்தியிசை தாலாட்டி யிருகரப்
பங்கயங் கொட்டி யொளிசேர்
உச்சிதமினை ந்தமதி முகமலரை முத்தமிட்
டுபெதியை யிங்கழைத்தே,
உன்னுடன் விளையாடவே செய்துவந்துபார்த்
துளங் களித் தன்பாகவே
இச்சைகொள், ளென்னிடம் வருவதற் கின்பமாய்
யெழினுற்ற பூஞ்சோலையு
மிருவிழிக் கடைசியர் குரவை யொலிமாறு
திசைந்த நற் செம்பழனமு
மெச்சிடச் சூழ்ந்த திருவளமதின நகர்வாவி
வெள்ள நீ ராடியருளே
மெய்ஞ்ஞான வடிவுகொள் ளருளான பாத்திமா
வெள்ள நீராடியருளே (6)

முக்கால முணர்கின்ற ஹக்கனெலி யாய் வந்த
முதியோர்க ணீ ராடவே
மூன்றுல குமேபோற்ற நற் குறைஷிக் குலத்தோர்கள்
முறையாக நீராடவே
திக்கெங் குமே புகழுமும் பருலகுற்றவர்
சிறப்பி னொடு நீராடவே
சக்கானு மேதினியி லுற்றவர்க ளெல்லா
மியல் பாக நீராடவே
இதயமிசை கற்பு நிலைகொண்ட பல மாதர்க
ளின்ப முடனீராடவே
மிக்க நயமண மேவு மலருற்ற வாவியின்
வெள்ள நீராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள் ளருளான பாத்திமா
வெள்ள நீராடியருளே (7)

தலைமீது வெண்பனிச் சுமை கொண்டஞாலமிசை
தங்குமனுயா வருக்குந்
தந்தையாய் முன்னிறைவ னருளினுலுண்டான
தவ மகிமை கொண்ட ஆதம்
நிலைமைநபி தன்மரபி லைம்பத்தி லொன் றினில்
நிருப ரணி யப்துல்லாவின்
நீதமக வாகவே நுபிரி ணிருளகலவே
நேர் மக்க மீ துதித்தக்
கலைஞான மொழிபயிலு நபிகளுக் கரசராம்
காமீமுகம்ம திறசூல்
கல்புக் குவந்த நன்மனைவி கதிஜா பெற்ற
கனகமே மணி விளக்கே
விலைமொழிய வொண்ணுத மாணிக்கமே வாவி
வெள்ள நீராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள் ளருளான பாத்திமா
வெள்ள நீராடியருளே (8)
தெள்ளியப் புகழ் பெற்ற வள்ளல் நபி நின்மனையில்
சிந்தை களி கொண்டு வரவே
சீருடனெதிர் சென்றழைத்து வந் தாசனந்
திறமாக வீந் திருந்த
வள்ளலைப் பார்த்தக மகிழ்ந்து முன் வந்து மென்
மலர் வாய் திறந்து ரசமாய்
வறுமையை யுரைத்திடக் கேட்டாதி வல்லவன்
வண் சுவன வாழ் வநந்தம்
உள்ளங் களித் தெவரு மொழிவதற் கரிதாக
வுதவு வானின் றனக்கே
யுறுதியுடனம் புவா யென் றுரைத்திடவுலகி
லோங்கு வாழ் வதனை விட்ட
விள்ளொணு மாதவச் செல்வியே மலர்வாவி
வெள்ள நீராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள் ளருளான பாத்மாதி
வெள்ள நீராடியருளே (9)

சொல்லொணு மாமகிமை வல்லவ னருள்பெற்ற
சோதி மஹ்மூது நபியின்
றேற்றிரத் தவமெலா மேதிரண்டு ருவாய்த்
துலங்கு நல்லதி ரூபமே
நல்லவழி செல்லுதற் கரிதான மெய்ஞ்ஞானம்
நல்க வரு மந்தாரமே
நற்பூவை மார் செய்த பாவமாம் பிணி நீங்க
நன் மருந் தான தாயே
முல்லைவெண் நகைமாத ருடலொத்த செண்பகம்
மோன நற் புலவு மாவும்
முக்கியப் பூஞ்சோலை சூழ நற்பழனமு
முறையாய் விளங்கு மேன்மை
மெல்லிய விதழ் கொண்டவர விந்தமலர் வாவி
வெள்ள நீராடியருளே
மெய்ஞ்ஞான வடிவு கொள் ளருளான பாத்திமா
வெள்ள நீராடியருளே (10)

நீராடற் பருவம் முற்றிற்று.

## ஊசற்பருவம்.

தன்பாலு றைந்த ஜிபுரீலைப் பார்த்து மதுநற்
சசிமுகம் வாட்டமென் னே
சாற்று வீரென் று நபிகேட்க நம்மகள் சிறிய
தந்தை யென்றெனை யழைத்தத்
துன்மொழியெ வேறில்லை வென்றவுட னறுசினிடை
தோய்ந்த சருபங் தெடுத்துச்
சொற்சிரங் காட்டமுன் னெழுபதா யிர மெல்லை
தோன்று முது குதுபு தாரு
மின்போ லுறைந் தொளிரு வதுகண்டு சிலசின்ன
மேவாது காரணத்தின்

விசயந் தெரிந்த மாமறை யெழுந் திருகாம்
வேண்டித் துதிக்குநயினார்
பொன் போலு மீன்ற நற்செல்வி பைங்கிளியே
பொன்னூச லாடியருளே
புனித நய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (1)
சந்த்ரோ தயமொத்த பிரபை தரு முத்தினற்
றம்பமிரு பாணிறுத்தித்
தன்வைர மொடுபச்சை மரகத மழுத்தி யொளி
தவிழு நல் விட்டம் பூட்டி
முந்தமாணிக்கத்தி னுயர் வடந் தூக்கிநல்
முழு நிதிப் பலகை சேர்த்து
மோனமுறு நற்சுவன பட்டாடை யணிந்து தவ
முறைதர வுறைந் திருந்து
வந்தளவி யரமாதரடி பரவி நிற்கவே
வண் குறை ஷியங் குலத்து
மாதருஞ் சிந்தை களிமேவி யிருகண்கொண்டு
மாண்புறத் தெரிசித்துமே
புந்தியாற் போற்றிப் புகழ்ந்து தொட்டாட்டவே
பொன்னூச லாடியருளே
புனிதநயகுண மேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச யாடியருளே (2)
குன்னென்ற வொரு மொழியின லண்டசராசரங்
குணமாய்ச் சமைத்த பெரியோன்
கூறுதற் கரிதான கருணைமிக வே கொண்ட
கோமான் முகம்மதிறசூல்
தனையுடன் யார்களும் சகுபாக்களும் பார்த்துச்
சந்தோஷமே பொருந்தத்
தகமை யாப்ப்போற் றெட்டிலமுகுற விருந்து நீ
சாற்றுதற் கரிய மேனி
வன்னப் பசுங் கொடியி நேரசையவாய் பவள
மலருந் துலங்க வதன

மதிதிகழ் நல்லறங் குடிகொண்ட செங்கையணி
வளைய லுஞ் சிறந் தொலிக்கப்
பொன்ன லரை யொத்தவிரு விழியிலருளொளிரவே
பொன்னூச லாடியருளே
புனிதநய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (3)
இருவிழியை மூடி யைம் பொறி புலனடக்கி நல்
லிசைதரத் தவமியற்று
மியற்கை யுள முதியோர்க ளிதயத் திலங்குமோ
ரிறைவ னருளுற்ற ஜிபுரீல்
பெருமகிமை கொண்டவரை யொருதரங்கண்டுமொழி
பேசு நல் லறி வன்னையே
பிருதவு செனுஞ் சொற்க லோக மாளி கையினுட்
பெட்ப் பாயிருக்கு மரசி
முருகவிழு முண்டகத் தடவளைக ளீன்றவெண்
முத்தை நற் பேட்டனங்கள்
முட்டையென் றிரகா லணைத் தடை கிடக்குமா
முதியவள மேவு மதினப்
பொரு வறும் பதியினுறை கற்பகத் தீபமே
பொன்னூச லாடியருளே
புனித நய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (4)
குறைஷிக் குலத்தோர்கள் வந்துங்களுசலைக்
குணமாய்க் களித்தாட்டவே
குவலையத் துதிகொண்ட பெரியோர்க ளுரியோர்சட்
குருமார்கள் வந்தாட்டவே
தறையா டையாய் கொண்டவாருதி மடர்ந்தை நற்
றழூவிப் புழ்ந் தாட்டவே
சன்மார்க்க மேவுதீன் மங்கையரு மே வந்து
தரமாய்த் துதித் தாட்டவே
இறையோனி னருள் பெற்ற கூருனி மாதர்க
ளிசைதர மொழிந்தாட்டவே

இந்தைப் பழித்த முகவன்னை கதிஜாவென்ற
வேந்திழை மகிழ்ந்தாட்டவே
பொறை மகிமை யனுதினங் குடிகொண்ட செல்வியே
பொன்னூச லாடியருளே
புனித நய குண மேவு மதுரமொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (5)
தாராரு மடவி சூழ் பொற்கமல வாவியிற்
றங்கி வாழ் புள்ளோசையுந்
தன் சிறைகை விரித்து விண் முகி லினங் கண்டுநிர்த்
தனம் பண்ணு மயிலோசையும்
நேரான ரதகஜத் துரகப் பதாதியின்
நிருப ரடி தொழு மோசையும்
நிகழுமுக் காலமு முணர் கின்ற முதியோர்க
ணிகழ்த்திடுந் திக்ரோசையுஞ்
சீரான மேன் மாட மீதிருந் தரிவையர்
செய் கின்ற யா ழோசையுஞ்
சிறியோர்க ளென்று நற் பள்ளி யிற் புகழ்கின்ற
செவ்வி புறு காதையும்
பூரா யொலிக் கின்ற மதினமா நகராகி
பொன்னூச லாடியருளே
புனித நய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (6)
கருணைகுடி கொண்ட விழிகத்தொத் தஞ்சனங்
கவினுறத் தீட்டி மேன்மைக்
கரமலரி லணிகனக வளையலிட் டழகான
காலிற் சிலம் பணிந்த
இருளுற்றகுற லினிடை நெய் தேய்த்து மலரிட்டு
மிடையி லரைஞ் ஞாண் பூட்டிவின்
னிலதுபோன றுடையை யணிந்து மெய்யெல்லா
மிலங்க மண வாடை பூசித்
திருமார்பி லொளிரு மாணிக்கப் பதைக்கஞ்
சிறப்பாய்த் தரித் துவக்குஞ்

செங்கை கதிஜா வென்ற வன்னையிரு கண்களொடு
சிந்தையிற் களிகொள்ளவே
பொருளா சையில்லாத மாதவச் செல்வியே
பொன்னூச லாடியருளே
புனித நய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (7)
கானகந் திரிகின்ற வெண்புள்ளி மானிற்குக்
கான் முளைத் தா னிலாமை
காதலித் தோர் விடுத்தம் ஸலவாதையெ
கழறித் துதித்த முறையாற்
றானவ னருளினு லோர் குழவி யீன்றபின்
றன்னைப் பிடித்தவேடன்
றகமை யொடு கலிமா பகர்ந்திடப் பிணைநின்ற
சாதுரிய மானவிறசூல்
ஊனமுறு மபுஜகிலை வென்ற மகுமூது நபி
புயர் தவத்தா லுதித்த
உலகமா தாவே சிறந்த பைங்கிள்ளையே
ஒய்யார மான் பொருளே
பூநறை பொருந்து தடமாமதின வாழ்வரசி
பொன்னூச லாடியருளே
புனித நய குணமேவு மதுர மொழி பாத்திமா
பொன்னூச லாடியருளே (8)
பங்கயப் பதமுற்ற கபுசை கழற்றுது
பரமனறு சேறி மீண்டப்
பயகாம்ப ரான மகுமூதிரு விழிகொண்டு
பார்த்துள மகிழ்ச்சி பொங்கத்
துங்கமா மதி முகக் குவைலீது வேந்தீன்ற
தோகை கதிஜா வினேடுச்
சுவனமுறு மாதரும் வாயாற் புகழ்ந்துகை
தொட்டு நின்றூட்ட மேகந்
தங்கித் தவழ்கின்ற மேன் மாட கூடங்கட்
டருவீதி தோறு மூன்று

சவிமுரசி னொலியரு தோங்கு மாமக்க நகர்
தலமீ துதித்த மயிலே
புங்கமணி மூத்தா லியற்றி வெகு பிரபைதரு
பொன்னூச லாடியருளே
புனிதநய குணமேவு மதுர மொழிபாத்திமா
பொன்னூசலாடியருளே (9)

காரண மிருந்த ஈசா வேந்தரமுகான
கமலவாய் மலர்திறந்து
கனமாயு ரைத்தபடி யறு நூறு வருடமாய்க்
காத்துத் தவமியற்றிச்
சிரண மிலாத விருகண் கொண்டு வழிபார்த்து
சிந்தித் திருந்த விஸ்ருக்
செம்மலே யடுத்து நற்கலிமா மொழிந்து பின்
திரு முத்தி நாடளித்த
ஆரண முகம்மதுற சூல் முஸ்தபா வீன்ற
அன்னை யிக்கவி தொடுக்கும்
அடிமைக்கிர ங்கியோராதி யைத் தெரிசிக்க
அரியவர மருளணங்கே
பூரணச்சசி வதனமொத்த நகை மின்னரசி
பொன்னூச லாடியருளே
புனிதநய குணமேவு மதுரமொழி பாத்திமா
பொன்னூசலாடியருளே (10)

ஆண்டவன ருட்டிருத் தூத ராய் வருமெங்க
ளருமதி றசூ லும் வாழ்க
அலைகட லுடுத்த புவி போற்று மதிபாத்திமா
வணிப் பிள்ளைத் தமிழும் வாழ்க
காண்ட காதவ மியலும் யார்களசனு சைனசு
காபிகளு மென்று வாழ்க
காவண முடுத்தபகு தாது நக ராளப்துல்
காதி றெலி நாதர் வாழ்

மாண்ட மனுவுயிர் மீட்டு நாகை ஷாகுல் கமீது
மகிமை பொலி நிதமும் வாழ்க
மாதவ மியற்று மொலி மார்களும் வாழ்க விம்
மானிலத் தோர்கள்வாழ்க
பூண்ட நந்நாகை யொலி மரபு சுல்தான் கலிபா
புனித மென் குருவும் வாழ்க
புலவர் ஷாகுல் கமிது மைந்தன் மீரான் சாகிபு
புகழிசைத் துலகில் வாழ்கவே (11)
ஆண்டவன் கிருபையால்
பாத்திபா நாயகப் பிள்ளைத் தமிழ் முற்றிற்று.
ஆக பருவம் 10-க்கு செய்யுள் 101.

# நபி நாயகதின் பேரில் பதங்கள்.

இராகம்-இந்துஸ்தான்-ரூபகம்

பல்லவி.

அருணை தய ஜனனத் திருவொளிவாய்
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே

மருமலர் துடவைசூழ் மக்காவிலாண்டிடும்
மன்ன ரப்துல்லா நுதலி லிலங்கிடும்
கருணை யாமினு வுதரத்தி லமைந்து
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிரந்தாரே. (அரு)

சரணங்கள்

தூயவெட்டுச் சுவன லோகந் துறக்கவுந்
தாவிணையில்லா நரகமடைக்கவும்
நேய மிறையோ னறுமைச் சிங்காரித்து
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே (அரு)

சொர்க்கத் தரம்பையர் திரளாகச்சூழ்ந்திடச்
சூதற்ற ஆசிய மறியமும் நின்றிட
அற்புதமாக ஆலாத்தி யெடுத்திட
நதபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே. (அரு)

உச்சிக்கு நெய்யிட்டுக் கண்ணிற் சுறுமாயிட்டு
உருதி நியதத்துடனே கொப்பிழ் கொய்திட்டு
லட்சண மாகவே யழகு சுன்னத்திட்டு
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே. (அரு)

பூகலத்தோர்புகழ் மேவியமக்காவில்
சீதசம்ரத்துல்உஸ்தா வெனும் தலத்தில்
நாதர் அபிதாலிபுத் திருமனையில்
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே. (அரு)

சாவாவெனும்பகர் வற்றிச்சுருண்டிடச்
தாட்டிகஞ்சேருவான் புரிசை இடிந்திடப்
பாவியிபுலீசின் நெஞ்சமுடைந்திட
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே. (அரு)

அய்ஞ்ஞான மார்க்கங்க ளோடியொளிக்கவும்
ஆலமெங்கும்புறு கானத் துலக்கவும்
மெய்ஞ்ஞான தீபமா யிவ்வுலகத்தினில்
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே. (அரு)

சங்கஞ் சிறந்த சங்கீதக் கவிராஜர்
சாகுல்கமீதுப் புலவரின் நேசர்
இங்கித மைந்தனை யாளுமுகம்மது
நபிபிறந்தார்-நபிபிறந்தார்-நபிபிறந்தாரே.

பதம் இராகம் பியாகு-செந்தாழம்பூ என்ற மெட்டு.

செந்தாமரைத் தேன்றுடவைத் திருமதீன நாயகா.

அநுபல்லவி.

நந்தாமணிவிளக்கே நற்புகழு முத்தனக்கே
அந்தரமாமதி சுந்தரமாயிரு
பந்தியாயமைத்த முந்த முகம்மதே (செ)

அம்பூவியிற் கெம்பீரமா யமரர் வணங்கு விமலரே
முன்பாலிறை யொளிவில் முத்தா யுதித்துலகில்
அன்னமயில்வடி நக்நய மாயொரு
தின்ண மரமீது நண்ணு முகம்மதே (செ)

பல்லாயிரந் தோற்றத்துக்குள் பதியுஞ் சுப்பிரகாசரே
துல் துல் நடாத்திவரும் துய்ய யலி மாதுலரே
துங்க வஜீகர சங்க மனோகர
இங்கித மெய்வரந் தந்தருள் நாயகா (செ)

கவிவாணர்கண்மெய்க்குஞ் சாகுல் கமீதுப் புலவர் மைந்தனின்
பவங்கள் பறந்திடவே பாதாம் புயந்தருவீர்
பாத்திபராகிய காத்திமுல்லன்பியா
கேத்திரத்திலுமைப் போற்றிபணிந்தேன் (செ)

---

# பாத்திமா நாயக மீதினிற்கீர்த்தனை

பதம்-இங்கிலீஷ் மெட்டு.

மாது சிரோன்மணியே மனோ மணியே
மங்காத பாத்தி மத்தே

அநுபல்லவி.

சீதமலர் தடஞ்சூழ் திருமதினா நகர் வாழ்
சீருற்ற மெய்ஞ்ஞானமே யருந்தவமே
செய்யிது பாத்திமத்தே (மாது)

1. தற்பரி பூரணமே இருகரமே
தந்தாமு மென் பரமே
பொற்பதி மாழிகையின் புனித நற்றவு சின் மீதின்
புகழாயிருந் தாண்டிடும் யருள் பூண்டிடும்
பூமானே பாத்தி மத்தே (மாது)

2. நந்தாமணித் தீபமே திருஜெபமே
நங்கை கதிஜா தவமே
மந்தார !மொத்தகர வள்ளல் நபியின் பர
மாநந்த நற்பாலகி திருநாயகி
மாதவ பாத்தி மத்தே (மாது)

3. முத்திதருஞ்ஞானமே யருணலமே
முச்சுடரின் தீபமே

சித்து நிலைபருளுஞ் சீர்வாமெற் கருளுந்
தெய்வ ரம்பையர் புகழு வொளிதிகளுஞ்
செய்யிது பாத்தி மத்தே (மாது)

4. பூவையெ பொற்கொடியே மதி வடிவே
பூலோக மாதாவே
பாவலர் ஷாகுல்கமிது பாலனுக்கெப் பொழுது
பாது கா'த்தருள் புரியுஞ் ஜெகம் புகழும்
பய காம்பர் நபிமகளே (மாது)

---

பதம் இராகம்-இந்துஸ்தான் ஏகதாளம்.

பாத்திமா நாயகியே பவங்கடிர்க்குந் தாயகியே

அநுபல்லவி.

காத்திமா நபிக் கடவுட் டிருஒளிவிற் கதித் தெழுந்தே
கேத்திரத்திற் பிறந்த கேகயமே பாத்திமத்தே (பாத்)

ஐனென்னுங் கண்ணுடிக்குள் ளாடும் வட்ட சுடர்மணியே
ஹாவெனுங் கூவதுக்குள் கூவிநின்ற பைங்கிளியே
துய்யவ ஞெளிவில் வந்ததத் தோகைதிரு பாத்திமத்தே (பாத்)

அடிமுடி நடுவுமில்லாவச் சரத்திலமைந்து நின்று
அகத்தியத்தாய் நிறைந்து வகத்தியத்தா யுலகில் வந்தே
வடிவுநற்றீன் விளைத்த வள்ளல் மகள் பாத்திமத்தே (பாத்)

ஓங்கார கம்பத்துள்ளே யோடி யுலாவுமயிலே
ஒவ்வாத பொற்பதியிற் றிவ்வியமா வாழ்குயிலே
நீங்காதபுருவத் திடைநின்றிலங்கும் பாத்திமத்தே (பாத்)

தாகாநந்நபி மனேவித்தவ கதிஜாபெருமானே
ஷாகுல்ஹமீது புலவர் மைந்தனே யாளுந்தேனே
வாகுநற்பொழி லடவிருழ் மதினு நாயகியே (பாத்)

---

பதம் இராகம்-சிந்து.

பூவை பொற்கொடியே கலிமாவினுட் பொருளே யிந்த
பூதலத்தினிற் றீனவர்க்குலமாதரைக்கரைசேர்த்திடும் பாத்திமா

பாவையர்த்திலத மணியான நற்கனியே எங்கள்
பாத்தியர் நபி நேத்திரமகள் சூஸ்திரப்பொருள்பாத்திமா நாயகி
மாவள மதினு நகராளு மா மதியே திறை
வாரி மீதெழு காரியர் தொழுஞ்சிரிய ரெனும் பாத்திமா நாயகி
மானே மாமயிலே திருமாமணிக் குயிலே ஜெக
மாதவர்த் துதி யோது நற்கதி சீதமாமதி பாத்திமா நாயகி
கான் மலர்க்குழ லாற் கதிஜா பெறு மகளாற் விளில்
கந்தாக்குடை வந்திடும் நபி சொந்த நன்மகள் பாத்திமாநாயகி
ஷாகுல் கமீதுப் புலவர் சந்ததிக் கெப்போது கவி
சாற்றிடும்புகழ் தேற்றிடும்கதம் போற்றிடுமதி பாத்திமாநாயகி

---

# முஹியித்தீன் ஆண்டவர்கள் பேரில்

## பதம்.

இராகம்-இந்துஸ்தான்-ரூபகம்.

பல்லவி.

கந்தங் கமழ்நகூல் பேரர் முகியித்தீன்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

1. நந்து முழங்கிய ஜெயிலானி தேசத்தில்
நாதர் செய்யிதபு சாலிகுத வத்தில்
சந்த்ரமணிவடி வான முகியித்தீன்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

சரணங்கள்.

2. தாயார் வயற்றினில் சேயா யிருந்திட
தங்கடஞ் செய்திடுந் தேவை வதைத்திட
நாயக ராகயிப் பூதல மீதினில்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

3. ஈரேழு பதினலு லோகந் துதிக்கவும்
இல்முள்ள மெய்ஞ்ஞானி யோர்கள் மதிக்கவும்
சிரோங்கு முச்சுட ரான முகியித்தீன்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

4. மங்கைவிருத்தையின் மகனை பழைத்திட
மன்னுதிமன்னர்கழ் வந்துபணிந்திட
துங்கவஜ்கர ரானமுகியித்தீன்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

5. அண்டமேழுங்கடந் தேறுநபியுல்லா
அம்பாதம் நற்புயந் தாங்கும் ஒலியுல்லா
மண்டலம் மீதினில் மோட்சம் விளங்கவே
கௌதுபிறந்தார் செதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

6. ஜின்னெடுத்தேகிய மாதைநவருந்திட
தீனுக்குயர்கொடுத் தோங்கி வளர்த்திட
நன்மொழி பாத்திமா பாலகர் முகியித்தீன்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

7. சங்கீத கீர்த்தனம் பாடித் துதித்திடும்
ஷாகுல்கமீது தன் மைந்தனுக்குதவிடும்
அங்கம் நறை கமழ் வீசு முகியித்தின்
கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தார்-கௌதுபிறந்தாரே (கந்)

## ஷாகுல் ஹமீது ஆண்டவர்கள்மீது கீர்த்தனை.

இராகம் தோடி அம்பிகா உன்மகன் என்ற மெட்டு.

நம்பினேனுங்கள் பாதமே
நாகைவாழ் ஞானத்தீபமே

அநுபல்லவி.

செம்பிராயுதிக்கும் க்ஷேத்திரமெலாந் துதிக்கு
தம்பிரான் நாதர் பேரரான மீரானொலியே வரமருள் (நம்)
விண்ணளவும் பொதிகை தனில்வீற்றிருக்கும்ரிஷிகட் [illegible]னின்
வண்மைசன்மார்க்கஞ்சேர்க்குங்கார்க்குமீரானொலியேவரமருள்
தாபதர்களிடபந்தனை தன்பசியினலதனை
நேசமாய் புசிக்குமனைவை பெழுப்பு மீரானொலியே வரமருள்
மாதவத்தோர் தினம்புகழும் மாணிக்கப்பூர் நகரில் வாழும்
வேதராமசன் குத்தூசின் பாலர் மீரானொலியே வரமருள்
ஷாகுல் ஹமீதுப்புலவன் சந்ததி யெப்போது மவன்
சேர்கநாகப் பதமே சிரசிலணிந்தே னொலியே வரமருள் (நம்)

## ஷாகுல் ஹமீது ஆண்டவர்கள் மீது கீர்த்தனை

பதம்—இராகம்-இந்துஸ்தான்.

சூட்ச மெய்ஞ்ஞான குருவே தெந் நாகூரில் வாழ்

அநுபல்லவி.

காட்சி சேர்ஞானி கௌது ஸமதானி
ஆட்சி சுபுகானி—எனுள் றகுமானி (சூட்ச)

1. தெங்காசி நங்நகரிற் றபோதன ரெருதை
சங்கையுடனருந்த இங்கிதம்போ லழைத்த
ஷாகுல் கமீதொலியே கஞ்சசவாயி (சூட்ச)

2. வேற்றிலைத் தாம்பூலற்றால் வேந்தர்பூசுபொலியை
நற்றவம்போல் வருத்துஞ் சித்து நிலையானகௌது
நாதர் மீருஜெலியே கஞ்சசவாயி (சூட்ச)

3. புலவர் ஷாகுல்கமீது புத்ரனுக் கெப்பொழுது
சலசமெய்ப் பாதம் நலமென்றன் புயத்திற்
றந்தாழ் பக்சென்பீரே கஞ்சசவாயி (சூட்ச)

இராகம்—இங்கிலீஷ்-மெட்டு.

மங்கள மங்களமே முகம் மதற்குமங்கள மங்களமே

அநுபல்லவி.

அங்கம் நறைகமழு மன்னல் முகம்மதுவின்
சங்கை மனைவி கதிஜா சகதலநன் மாதாவுக்கு மங்களம்
செம்பொன் னுலகந்தன்னில் சீருற்ற மாளிகையில்
சம்பூறணத்துட னுளும் சாதாத் பாத்திமா நாயகிக்கு மங்களம்
அண்[illegible]ர்கோ நற்றெருட்டிலே யணியாய்ப் புகழ்ந்தாட்டும்
மண்டலந்துதிக்கு மிமாமசன் ஹ[illegible]சைன்வேந்தரவர்க்குமங்களம்
ஸித்தீக்கபுபக்கர்ச் செழுமதியும றுதுமான்
கத்தன றுகப் புலி காலியலி யசுகாபிகட்கு மங்களம்
சந்த்ரவதனத் தோராஞ் சகல ஒலிகட்குருவாஞ்சும்
சுந்தரர் குதுபுமுகியித்தீனுண்டவர்குசோபனத்துடன் மங்களம்
நந்து விடைக்குயிரை நன்மையுடன் கொடுக்கும்
விந்தை நாகைப்பதிவாழ் வேந்தர்மீறான்சாகிபொலிக்குமங்களம்
சிங்காசனப் பிரபு செம்மல் மீருஜெலியின்
துங்கப் பேரராமென்குரு சுல்தான் கலிபா சாகிபுக்கு மங்களம்
கவிவாணர் [illegible] செய்யித் முகியித்தீன் கவிராஜர்
தவபோர் [illegible] மைந்தன் தண்டமிழ்ப் புகழ்
[மங்களம்.

14843

யாகாதிற்.

இப்பிள்ளைத் தமிழை அச்சிடும்படி பொருளுதவி செய்த

கொடைநாயகர்;பேட்மாநகரம் ஹலறத்துமல்லாறு

**K. M மீருன்சாகிபு ஆலீம்அவர்கள்சமுகத்துக்கு,**

யெழுதிய நிருபச் செய்யுள்.

திருமேவு மகாசல ராசியோ டண்டமொடு
 செம்பொன் னுல கறுசு குறுசுந்
திகழுவெண் மதிபரிதி யோடுடுக் கணவெற்புஞ்
 சித்தாய் சமைத்த மகிபன்
சிந்திக் கிறைஞ்சு முதியொர்க டிகபக்திலிற்
 சீராயுறைந்த விமலன்
திருவொளி விலணிய வெண்டரள வடிவாயிருந்
 தீர்ச்சை யுறு மாமஞ்ஞையாய்
மருமேவு சஜரத் தெகீ னென்ற தருமுடியின்
 மன்னிப் பொலிந்திருந்தே
வல்லோனை யெப்பொழுது மாண்பாயி றைஞ்சிநற்
 மாமங்கை யாமினு வின்
மகவாய் பிறந்துலகி லுற்பவஞ் செய்தாளு
 மன்னரா மெந்தன் பெருமான்
வள்ளலகு மது முகம்மது முஸ்தபா உபய
 மலரடி துதிக்கும் வித்வான்
ருமேவு நற் கங்கை சூழ் மேலப்பாளையந்
 தங்கிச் சிறந்திலங்குந்
தண்டமிழ் கவியர் ஷாகுல் கமீதுப்புலவர்
 தனையன் மீருன் சாகிபுத்
தகமை நற் புலவரெழுதும் நிருப மென வென்றால்
 சகதலம் முடியு நாளிற்
றவமுறையு முஸ்லீம் குலத்தின் மின்னார்களைத்
 தாங்கிசமேடற்று மரசி
குருமேவு நபிபெற்ற பாத்திமத் தன்னைமேற்
 கூறும்பிள்ளைத் தமிழதை
குவலையத்தினி லச்சிலிடு வதற் கரும்பொருள்
 கொடுக்குந் தயாள குணமாய்
கோனருளுலாவும் பேட்மா நகரிலாண்டிடுங்
 கொற்றவா நற்றவத்திற்
குடிகொண்ட கேயம் மீருன் சாகிபாலிமெனும்
 கோதற்ற கொடைவள்ளலே.